உங்கள்

ஆகஸ்ட், செப்டம்பர்
1989
விலை : 5/-

கலை, இலக்கி.. சமுக மாத இதழ் வளர்மதி வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ முன்னர் நட்சத்திரமாக மின்னியவர்கள்
இன்று சூரியனாக ஒளி வீசுகிறார்கள்.....

SUN VIDEO COMPLEX
K.K.S ROAD, THAVADY

காலத்தால் மறக்க முடியாத நிகழ்ச்சிகளை-
வர்ண வீடியோவில் பதிவாக்கி மகிழ

சன் வீடியோ கொம்பிளெக்ஸ்

- நவ நவீன தொழில் நுட்ப
- திறன் மிக்க கலைஞர்களின்
- கை வண்ணத்தில் ... ..

விழாக்கள், வைபவங்கள், உற்சவங்கள் .....
அனைத்தினையும் வீடியோ மற்றும் வர்ண புகைப்படம்
எடுக்கவும், பிரதிபண்ணவும்

சன் வீடியோ கொம்பிளெக்ஸ் ஒப்பற்ற ஒரே இடம்

- வீடியோ, ஒடியோ கசெற்றுகள்
- பிலிம் வகைகள்
- அழகிய சிலைகள், படங்கள்
- ஸ்ரிக்கர்ஸ், அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்திற்கும்

SUN VIDEO COMPLEX & MIXING STUDIO

K.K.S. ROAD: THAVADY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம்

மதி : 1 - பிறை : 7

வெள்ளை நிறப்பூவுமல்ல;
வேறெந்த மலருமல்ல;
உள்ளக்கமலமடி
உத்தமனார் வேண்டுவது

முயற்சி வெற்றி தரும்
கொக்குவில்
வளர்மதி முன்னேறுக் கழகம்

உள்ளத்தின் ஆசிரியர் குழு உறுப்பினரும், எமது சனசமூக நிலைய அங்கத்தவருமான செல்வன் நாகராஜா மதனராஜன் விடம் தீண்டி 8-8-1989 அன்று மரணமானார் என்பதை ஆழ்ந்த வேதனையுடன் அறியத்தருகிறோம்.

மலர்வு: 30 - 04 - 1968
உதிர்வு: 08 - 08 - 1989

நிலவு-
நிலைகுலைந்து
நித்திலத்தில் வீழ்ந்ததென
நிகழ்ந்தது
உன் மரணம்

O

நீ ஒரு பூவாகத்தான்
கிடந்தாய்
எங்களுக்குள் மட்டும்
ஏனிந்தப் பூகம்பம்?

O

உனது தடங்களில்
பின்னோக்கி நடக்கையில்
நினைவுகள் வானவில்லாய்
ஜாலம் காட்ட.....
நிழலைப் பிடித்தபடி
நிஜத்தைத் தேடுகிறோம்.

O

உனது மௌனம்
வாழ்வின் அர்த்தங்களை
அநாதையாக்கி விட... ...
மரணத்தின் ஆளுமையை
மௌனமாக
ஜீரணிக்க முயல்கிறோம்.

O

நமது காலங்கள்
அகாலமாகியேபோகின்றன
ஏதுமற்ற-
அந்தகார இருளில்
சிதைகளின்
சுவாலைகளினூடே
நாம்-
எதனைத் தேடுகிறோம்

O

நண்பனே .....
நிஜங்களைப் பிரிந்து
நிழல்களுடன்,
நினைவில்
உறவு கொள்வோம்
உறைந்த நினைவுகளை
உடைத்தெழு ...
உணர்வில் உரையாடுவோம்

O

ஆத்மா அழிவதில்லை
ஆயின்—
அஞ்சலிகள் எதற்காமோ?

O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் களம்

தொகுத்தவர்:-
☐ க. ஜெயமனோகரன்

O உலகிலேயே மிகச்சிறிய பறவையினம் எதுதெரியுமா? கியூபா நாட்டிலுள்ள 'பீ ஹம்மிங் பேர்ட்' எனப்படும் இரண்டு அங்குல நீளமுள்ள பறவையினமாகும்.

O கனடா நாட்டின் வான்கூவரில் நடைபெற்ற எக்ஸ்போ 86 பொருட்காட்சியில் வைக்கப்பட்ட ஹாக்கி மட்டையின் நீளம் 200 அடி.

O QUOTATIONS FROM THE WORKS OF MAOTSETUNG - இந்நூல் மாவோவினால் எழுதப்பட்டு 80 கோடி பிரதிகள் வரை விற்பனையாகியது. இந்நூலை வாங்கும்படி சீன அதிகாரிகள் மக்களைக் கட்டாயப்படுத்தினார்களாம்.

O ஒலிம்பிக் தங்கப்பதக்கம் முழுவதும் தங்கத்தினால் ஆனதல்ல 92 /. வெள்ளிதான். தங்கம் 5 அவுன்ஸ் மட்டுமே. இதன் மதிப்பு 350 டாலர்.

O மெக்சிகோ நகரான் எனப்படும் ராட்சசப் பல்லிகள் இந்தோனேஷியாவின் சிலதீவுகளில் வாழ்கின்றன. பத்தடி நீள உடலும் பத்தடி நீள வாலும் கொண்டதாகக் காணப்படும் இவற்றின் உணவு இறந்த மீன்களே.

O புத்தாண்டு முஸ்லிம்களுக்கு துக்கத்துடனேயே தொடங்குகிறது. ஏனெனில் அவர்களுடைய புத்தாண்டு மாதமான மொகரம் மாதத்திலேயே நபிநாயகத்தின் பேரரான ஹுசேன், யாஸித் என்பவரோடு போரிட்டு மாண்ட மாதமாகையால்அம்மாதத்தை துக்கமாதமாக அனுஷ்டிக்கிறார்கள்.

O ஜப்பான் நாட்டிலுள்ள கியோட்டோவில் உள்ள கோயில் ஒன்றில் அந்நாட்டு மக்களின் கருணைத் தெய்வமான க்வன்னானின் 33333 சிலைகள் உள்ளன.

O உலகம் முழுவதுமுள்ள காடுகளில் கால்பங்கு சோவியத் யூனியனிலேயே உள்ளன. ஆர்க்டிக் வட்டத்தையொட்டிய வடபகுதியில் 110 கோடி ஹெக்டேர் பரப்பில் ஊசியிலைக் காடுகள் உள்ளன.

O 1976ல் சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ஒன்றில் எட்டு லட்சம் பேர்வரை உயிரிழந்தனர்

வாசகர்களே கவனிக்க:

13ம் பக்கத்தில் வலது பக்க 2ம் பந்தியில் தாக்கமும், வீச்சமும் என்றும் 3ம் பந்தியில் ஆய எவ்விதம் இந்த பதின்மூன்று ஆண்டுகளாகமட்டுப்படுத்தப்பட்ட பிரதிகளுக்குள முடக்கப்பட்டுள்ளதோ அவ்விதமான அபாயம் தீசைக்கும் நேரலாம் என்றுதிருத்தியாசிக்கவும்

★

'உள்ளம்' இதழ்களை தொடர்ந்துவாசித்துவரும் வாசகர்களுக்கு இந்த ஆண்டு இறுதியில்போட்டி ஒன்று காத்திருக்கிறது. போட்டியில வெற்றி பெறும் முவருக்கு முன்று முத்தான பரிசில்களை வழங்க நாங்கள் காத்திருக்கிறோம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★

○ படைப்புகளிற்குப் படைப்பாளர்களே பொறுப்பு.

○ உங்கள் காத்திரமான படைப்புகளையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் அனுப்பிவையுங்கள்.

○ எமது அலுவலக முகவரி

'உள்ளம்'
ஆசிரியர் குழு.
வளர்மதி சனசமூக நிலையம்
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

★

அட்டைப்படப் போட்டி:

அட்டைப் படத்திற்குப் பொருத்தமான கவிதை ஒன்றினை எழுதி இம்மாதம் 25 ம் திகதிக்கு முன்பாக அனுப்பிவையுங்கள் ஓவியர் தயாவினால் மிகச் சிறந்ததெனத் தெரிவு செய்யப்படும் கவிதைக்கு 50/2 பரிசாக வழங்கப்படும்.

★

தீபாவளி சிறப்பிதழ்

○ அடுத்த இதழ் அதிகபக்கங்களுடன் தீபாவளி சிறப்பிதழாக மலர்கிறது. ஈழத்து முன்னணி எழுத்தாளர்கள் பங்குகொள்கிறார்கள். பிரதிகளுக்கு முந்துங்கள்.



விமர்சனம்- ஒரு விபரீதமான கலை என்பது ''சியான்சென்'' என்ற சீனரின் வாக்கு.

எந்தவொரு கலையும் அதைக் கையாளுபவனின் இதயநேர்மை, துணிவு, தெளிவு ஆகியவற்றின் ஆளுமையிலேயே மெருகு பெற்று மேன்மையடைகிறது.

விபரீதம் எப்போது நிகழ்கிறதென்றால்: அதுமே தரவித்தனம் அல்லது புத்தி ஜீவித்தனம் என்கிற வாட்டு உன்ர்வு, சித்தாந்த சிறைக்குள் இருந்து சிந்திக்கிற குருட்டுப் போக்கு, வித்துவச் செருக்கு என்கிற விதண்டாவாதத் தன்மை ஆகியவை மேலோங்கும் போதுதான்.

நடுமண்ணில் விமர்சகர்கள்தான் மிகமோசமான முறையில் விமர்சனத்துக்குள்ளாகிறார்கள்.

இதைவிடப் பரிதாபநிலை என்னவென்றால் இத்தகைய விமர்சகர்களின் அங்கீகாரத்திற்கும், ஆசீர்வதிப்புக்கும் நம் படைப்பாளிகள் ஆலாய் பறப்பது தான்.

ஒரு படைப்பின் தரத்தினை அல்லது ஒரு படைப்பாளியின் தரனை நிர்ணயிக்கும் மிகச் சிறந்த விமர்சகர்கள் மக்களும் காலமும் தான்.

விமர்சகனுக்குத் தீனி போடுபவனே படைப்பாளிதான். இப்படியிருக்க நம் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளின் முனனுரைக்கும், ஆய்வுரைக்கும் விமர்சன நந்திகளின் வீடுகளில் காத்திருந்து, அவர்களின் கருணைக் கடாட்சத்தில் ஐந்தாறு ஆசீர்வாத வரிகளைப் பெறத் தவங் கிடப்பது படைப்பாளியின் தன்னம்பிக்கையற்ற தன்மையையும், பலவீனத்தையுமே காட்டுகிறது

பலவீனனும், தன்னம்பிக்கையுமற்ற படைப்பாளியின் எழுதுகோல் அவர்சார்ந்த சமூகத்தின் எழுச்சிக்குதடைக் கோலாக இருக்குமேயன்றி நெம்புகோலாக இருக்க முடியாது

தன்னைக் குருவானவராக நினைக்கும் எந்த விமர்சகனாலும் ஆக்கபூர்வமான படைப்பாளிகளை உருவாக்கவும் முடியாது.

-ஆசிரியர்குழு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ மலையாளச் சிறுகதை

உலகப் புகழ்பெற்ற மூக்கு

□□□

உலகப்பிரசித்தி பெற்ற அந்த மூக்கின் சரிதை அவனுடைய இருபத்து நான்கு வயது பூர்த்தியான சமயத்தில் ஆரம்பமாகிறது. அதுவரையில் அவனை யாரும் அறிந்தாரில்லை. இந்த இருபத்திநான்கு வயதுக்கு ஏதாவது விசேஷம் உண்டோ என்னவோ? ஒன்று மட்டும் உண்மை. உலக சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றி ஒன்றும் கவலைப்படாதவன். எதற்காகக் கவலைப்படவேண்டும்? நன்றாகச் சாப்பிடவேண்டும்; சுகமாக மூக்குப் பொடி போடவேண்டும் உறங்க வேண்டும்; மீண்டும் எழுந்திருக்க வேண்டும் வேலை செய்ய வேண்டும்; இவை தான் அவனுடைய தினக்கடன்.

வைக்கம் முகம்மது பஷீர்

- கோளத்திலுள்ளவைக்கத்தில் 1910 ம் ஆண்டு வைக்கம் முகம்மது பஷீர் பிறந்தார்.
- பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்ட பின்னர் ஒய்ந்திருக்கப் பிடிக்காமல் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்க்கத் தொடங்கினார் கூடவே அரசியல் போராட்டங்களிலும், முற்போக்கு இயக்கங்களிலும் தீவிரமான ஈடுபாடு காட்டினார்.
- மலையாள இலக்கியத்துறையில் முன்னோடியான இவர் மலையாள மொழியில் சிறுகதைகளும், நாவல்களும் எழுதவழிச் செப்பனிட்டவர்களில் முக்கியமானவர்.
- முஸ்லீம் மக்களின் பழக்கவழக்கங்கள் ஏனையோருக்கு நீரகம் தெரியாத நிலையில் தமது படைப்புகள் வாயிலாக அவைகளைத் தெளிவாகக் காட்டிய பெருமை இவருக்கு உண்டு.
- பதினொரு சிறுகதைத் தொகுப்புகளும், நாவல்களும், குறுநாவல்களுமாக எட்டுமிகசுரமாகியுள்ளன. சினிமாஈடுபாடும் இவருக்கு உண்டு.
- சாகித்ய அகாதமியின் :பெல்லோவாக 1969ல் ஆண்டு இவர் கௌரவிக்கப்பட்டார்.
- "உலகப்புகழ் பெற்ற மூக்கு" என்னும் இச்சிறுகதையினை இவ் இதழில் பிரசுரிப்பதில்மகிழ்ச்சி அடைகிறோம்.

தினைப்படையச் செய்யும் செய்தி. அறிவுடை மக்களிடையே பெரிய சர்ச்சைக்குக் காரணமாயிருக்கிறது அந்த மூக்கு.

அந்த மூக்கின் உண்மைக் கதையை இங்கு எழுதப் போகிறேன்.

அநேக மகான்களின் இருபத்து நான்காவது வயதுக்குச் சிலவிசேஷங்கள் காணலாம். சரித்திர மாணவர்களிடம் இதை எடுத்துரைக்க அவசியமில்லை.

நமது கதாநாயகன் ஒரு சமையல்காரனாக இருந்தான். சொல்லத்தக்க அறிவு ஒன்றும் அவனுக்கு இருக்கவில்லை எழுதவும் படிக்கவும் தெரியாது. சமையலறையே அவனுடைய உலகம். அதற்கு மாதங்களின் பெயர் அவனுக்குத் தெரியாது சம்பளம் வாங்க வேண்டிய சமயம் வந்தால் அவனுடைய தாயார் வந்து சம்பளம் வாங்கிக் கொண்டு போவாள். மூக்குப் பொடி வேண்டுமென்றால் அந்தம்மாளே வாங்கிக் கொடுப்பாள். இப்படி மனநிறைவுடன் வாழும் அவனுக்கு இருபத்து நான்கு வயது பூர்த்தியாகிறது. அதோடு அதிசயம் நடக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு விசேஷமொன்றுமில்லை. மூக்கு கொஞ்சம் நீளம் வந்திருக்கிறது; வாயைத் தாண்டித் தாடிவரை நீண்டு நிற்கிறது!

அப்படி அந்த மூக்கு நாள் தோறும்வளர ஆரம்பித்தது. மறைத்து வைக்க முடியுமோ? ஒரு மாதத்துக்குள் அது பொக்கிள் வரை நீண்டு விட்டது. ஆனால், ஏதாவது அசுகம் இருந்ததா? ஒன்றுமில்லை! சுவாசம் செய்யலாம். பொடி போடலாம். வாசனைகளை நுகர்ந்தறியலாம். சொல்லத்தக்க ஓர் அசௌகரியமும் இல்லை.

ஆனால் மூக்கு காரணமாக அந்த ஏழைச் சமையல்காரன் வேலையிலிருந்து விலக்கப்பட்டான்

காரணம் என்ன?

''விலக்கப்பட்டவனைத் திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறிப் போராட்டம் நடத்த ஒரு சங்கமும் முன் வரவில்லை. இந்தக் கொடும் அநீதிக்கு முன் அரசியல் கட்சிக்காரர்களெல்லாம் கண் மூடிவிட்டார்கள்.

''அவரை எதற்காக விலக்கினார்கள்?'' மனிதாபிமானிகள் என்று கூறும் யாரும் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை.

பாவம், சமையல்காரன்!

வேலை இழந்ததற்குக் காரணம் என்ன என்று யாரும் அவனுக்குச் சொல்லத் தேவைப்படவில்லை. வேலைக்கு வைத்திருந்த வீட்டுக்காரருக்கு நிம்மதி இல்லாமல் போனது தான் காரணம். மூக்கனைப் பார்ப்பதற்கு இராப்பகல் ஜனங்கள் வந்தார்கள். புகைப்படம் எடுப்பவர்கள் தொந்தரவு செய்தார்கள். பத்திரிகையாளர்கள் தொல்லை கொடுத்தார்கள்.

அந்த வீட்டிலிருந்து பல சாமான்கள் திருட்டுப் போயின.

இப்படி வேலையிழந்த அந்தச் சமையல்காரன் தனது ஏழைக் குடிசையில் பட்டினி கிடக்கும் போது ஒரு விஷயம் அவனுக்கு நன்றாகப் புரிந்தது. அவனும் அவனுடைய மூக்கும் மிகவும் பிரபலமடைந்திருக்கின்றன!

அயல் நாடுகளிலிருந்து அவனைப் பார்க்க ஆட்கள் வருகிறார்கள். நீண்டு போன மூக்கைக் கண்டு ஆச்சரியப்பட்டு நிற்கிறார்கள். சிலர் தொட்டுப் பார்க்கவும் செய்கிறார்கள். ஆனால், யாரும் ... எவரும், ''நீங்கள் சாப்பிடவில்லையா? ..... ஏன் இவ்வளவு பலவீனம்?'' என்று கேட்கவில்லை. ஒரு சிமிட்டிப் பொடி வாங்கக் கூட அந்த வீட்டில் பணமில்லை. பட்டினி போடப்பட்ட காட்சி மிருகமா அவன்? மடையனானாலும் அவன் மனிதன். அவன் தன் வயதான தாயாரைக் கூப்பிட்டு ரகசியமாகச் சொன்னான்:

''இந்தச் சனியன்களை விரட்டி வெளியேற்றிக் கதவடையுங்கள்!''

அன்று முதல் அவர்களுக்கு நல்ல காலம் பிறந்தது! அந்தம்மாளுக்கு லஞ்சம் கொடுத்துச் சிலர் மகனுடைய மூக்கைப் பார்க்க ஆரம்பித்தனர்! இந்த லஞ்ச ஊழலுக்கு எதிராகச் சில நியாயவாதிகள் குரல் எழுப்பினர். ஆனால் அரசாங்கம் இந்த விஷயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசாங்கத்தின் உதாசீனத்தைக் கண்டித்து எதிர்ப்பாளர்கள் பலரும் அரசாங்கத்தின் எதிரிகளான பல உதிரிக் கட்சிகளில் சேர்ந்தார்கள்!

மூக்கனுடைய வருவாய் நாள்தோறும் பெருகியது. மிகைப்படுத்த வேண்டிய தில்லை! எழுத்தறிவில்லாத அந்தச் சமையல்காரன் ஆறு வருடங்களில் லட்சப் பிரபுவானான்!

அவன் மூன்று தடவை சினிமாவில் நடித்தான். ''திஹ்யூமன்ஸ்மெரைன்'' என்ற டெக்னிக்கலர் படம் எவ்வளவு கோடி ரசிகர்களைக் கவர்ந்தது! ஆறு கவிஞர்கள் மூக்கனுடைய அருங்குணங்களைப் புகழ்ந்து போற்றி மகாகாவியங்கள் இயற்றினர். ஒன்பது எழுத்தாளர்கள் மூக்கனுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிச் செல்வமும் புகழும் பெற்றனர்.

அவனுடைய இருப்பிடம் ஏழைகளின் அடைக்கலமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது. எவருக்கும் அங்கு எப்போதும் உணவுண்டு: ஒரு சிமிட்டி மூக்குப் பொடியும் கூட.

அந்தக் காலத்தில் அவனுக்கு இரண்டு காரியதரிசிகள் இருந்தார்கள். இரண்டு அழகிகள்; படித்தவர்கள்.

இருவரும் மூக்கனைக் காதலிக்கிறார்கள். இருவரும் மூக்கனை மதிக்கிறார்கள்.

இரு அழகிகள் ஒரு மனிதனை ஏக காலத்தில் காதலிக்கும் போது சில்லறைத் தகராறுகள் ஏற்படலாம் அல்லவா? மூக்கனுடைய வாழ்க்கையிலும் அவ்வாறே ஏற்பட்டன.

அந்த இரு யுவதிகளைப் போல் பொது மக்கள் யாவரும் மூக்கனை விரும்புகிறார்கள். பொக்கிஷ் வரை நீண்டு கிடக்கும் அந்த மூக்கு புகழின் சின்னமாகத் திகழ்ந்தது.

உலகில் நடக்கும் முக்கிய சம்பவங்களைப் பற்றி மூக்கன் கருத்து அறிவிப்பான். பத்திரிகையாளர் அதை பிரசித்தப் படுத்துவர்.

''ஒரு மணி நேரத்தில் 10,000 மைல் வேகமுள்ள விமானம் செய்யப்பட்டிருக்கிறது! அதைப்பற்றி மூக்கன் கீழ்க்கண்டவாறு அபிப்பிராயம் தெரிவித்தார்..!

''இறந்த மனிதனை டாக்டர் புந்துரோஸ் புராசி புரோஸ் உயிர்ப்பித்தார். அதைப்பற்றி மூக்கன் கீழ் கண்டவாறு அபிப்பிராயம் தெரிவித்தார்...!

உலகத்திலேயே உயர்ந்த சிகரத்தில் சிலர் ஏறினர் என்று அறிந்த போது மக்கள் கேட்டார்கள்.

''அதுபற்றி மூக்கன் என்ன சொன்னார்?''

மூக்கன் ஒன்றும் சொல்லவில்லையென்றால் ... பூ! அந்தச் சம்பவம் முக்கியமில்லை. இப்படி ஓவியம், கடிசார வியாபாரம், மெஸ்மரிசம், போட்டோகிராபி, ஆன்மா, புத்தக வெளியீடு, நாவல் எழுதுவது, சவுக்குப்பின் வாழ்வு, பத்திரிகை நடத்துவது, வேட்டையாடுதல் என்று எல்லா விஷயங்களைப் பற்றியும் மூக்கன் கருத்துச் சொல்ல வேண்டும்!

இந்தச் சமயத்தில் தான் மூக்கனைக்கைப்பற்றப் பெரிய சதி வேலைகள் நடக்கின்றன. ''கைப்பற்றுதல்'' என்பது புதிய திட்டமொன்றுமல்ல. உலக சரித்திரத்தின் முக்கிய பகுதிகளெல்லாம் கைப்பற்றுதலின் கதையே.

''கைப்பற்றுதல்'' என்பது தான் என்ன?

நீங்கள் தரிசு நிலத்தில் தென்னம்பயிர் நடுகிறீர்கள், தண்ணீர் பாய்ச்சுகிறீர்கள், உரம் போடுகிறீர்கள், வேலி கட்டுகிறீர்கள், எதிர்பார்த்த வருஷங்கள் முடிந்து தென்னை மரங்கள் காய்க்கின்றன. குலைகுலையாத் தேங்காய்கள் நன்றாகத் தொங்குகின்றன. அப்போது உங்களிடமிருந்து அந்த இடத்தைக் கைப்பற்ற எவருக்கும் ஆசை பிறக்கும்!

முதன்முதலாக மூக்கனைக் கைப்பற்ற முயற்சி எடுத்தது அரசாங்கமே. அதொருயுக்தியாகஇருந்தது ''நாசிகப் பிரமுகன்'' என்ற பட்டத்தோடு அரசாங்கம் மூக்கனுக்கு ஒரு பதக்கத்தையும் கொடுத்து ஜனாதிபதியே அந்த வைரம் கட்டிய தங்கப் பதக்கத்தை மூக்கனுடைய கழுத்தில் அணிவித்தார். பிறகு கைகுலுக்குவதற்குப் பதிலாக மூக்கனுடைய மூக்கின் நுனியைப் பிடித்து ஜனாதிபதி குலுக்கினார். இதன் செய்திப்படம் நாடெங்கும் சினிமாக் கொட்டகைகளில் வெளியிடப்பட்டது.

இதற்குள் அரசியல் கட்சிகள் உஷாராக முன்வந்தன. மக்களுடைய புரட்சிக்குத் தோழர் மூக்கன் தலைமை தாங்க வேண்டும்! தோழர் மூக்கனா! எவருடைய தோழர்! எதற்காகத் தோழர்? கடவுளே? பாவம் மூக்கன்! மூக்கன் நம் கட்சியில் சேர வேண்டும்!

நம் கட்சி என்றால் எந்தக் கட்சியில்? கட்சிகள் பல உண்டு. எல்லாவற்றிலும் ஒரே சமயத்தில் மூக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிச் சேர முடியும்? மூக்கன் சொன்னான்

''நான் எதற்காகக் கட்சியில் சேர வேண்டும்? என்னால் அது முடியாது!''

இப்படி இருக்கும் போது, காரிய தரிசிகளில் ஒருத்தி கூறினாள், ''என்னிடம் விருப்பம் இருந்தால் தோழர் மூக்சன் என் கட்சியில் சேர வேண்டும்!''

மூக்கன் பேசவில்லை.

''நான் ஏதாவது கட்சியில் சேர வேண்டுமா!'' மூக்கன் மற்றொரு காரியதரிசியிடம் கேட்டான். அவளுக்கு விஷயம் புரிந்து விட்டது. அவள் கூறினாள். ''எதற்காக?''

இதற்குள் ஒரு கட்சிக் காரர்கள் கோஷம் போட்டு வந்தனர்.

''நம்முடைய கட்சி மூக்கனுடைய கட்சி! மூக்கனுடைய கட்சி மக்களின் கட்சி!''

இதைக் கேட்டு இதர கட்சிக் காரர்களுக்குக் கோபம் பொங்கியது. அவர்கள் மூக்கனுடைய ஒரு காரியதரிசியின் மூலம் மூக்கனுக்கு எதிராக ஒரு திடுக்கிடும் அறிக்கையை வெளியிட்டனர்:

''மூக்கன் மக்களைஏமாற்றி விட்டான்! இவ்வளவு காலம் மூக்கன் மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தான். இந்தக் கொடிய வஞ்சனையில் என்னையும் ஒரு பங்காளியாக்கினான். நான் மக்களிடம் உண்மை கூறுகிறேன்; மூக்கனுடைய மூக்கு ரப்பர் மூக்கே!''

ஆ! இந்தச் செய்தி உலகமெங்கும் பத்திரிகைகளில் பெரிய அளவில் பிரசுரிக்கப்பட்டது. மூக்கனுடைய மூக்கு ரப்பர் மூக்கு!

இதைக் கேட்டால் மக்கள் வியப்படையாமல் இருப்பரோ? எழுச்சி கொள்ளாமல் இருப்பரோ? உலகின் எல்லாப் பகுதிகளிருந்தும் தந்திகள், போன்கள், கடிதங்கள்! ஜனாதிபதிக்கு இருப்புக் கொள்ளவில்லை.

''மக்களை ஏமாற்றிய ரப்பர் மூக்கன் ஒழிக! ரப்பர் மூக்கனின் கட்சி ஒழிக. புரட்சி ஓங்குக'' என்ற கோஷங்களை மூக்கனுடைய எதிர்க்கட்சிகள் எழுப்பின போது அவன் கட்சிக்காரர்கள் மற்றொருகாரியதரிசி மூலம் வேறோர் அறிக்கையை வெளியிட்டனர்.

''அன்புநிக்க மக்களே! அவள் கூறியது முற்றும் பொய். அவளைத் தோழர் மூக்கன் காதலிக்கவில்லை. அதனால் ஏற்பட்ட பொறாமையே. தோழர் மூக்கனுடைய செல்வத்தையும் புகழையும், கைப்பற்றவே அவள் முயன்றாள். அவளுடைய தம்பிகளில் ஒருவன் எதிர்க்கட்சியில் இருக்கிறான். அந்தத் திருட்டுக் கட்சியின் உண்மை உருவத்தைக் காண்பிக்க நான் இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்கிறேன். நான் தோழர் மூக்கனுடைய அந்தரங்கக் காரியதரிசி. எனக்கு நேர்முகமாகத் தெரியும். தோழருடைய மூக்கு ரப்பால்ல என்னுடைய இதயம் போல் உண்மையானது. பிரதிபலன் எதிர் பாராமல் இந்த இக்கட்டான நிலையில் தோழர் மூக்கனுடைய பின்னால் அணிவகுத்து நிற்கும் மக்கள் முன்னேற்றக் கட்சி ஜிந்தாபாத்! தோழர் மூக்கன் ஜிந்தாபாத்! தோழர் மூக்கனுடைய கட்சி மக்களின் முன்னேற்றக்கட்சி! புரட்சி ஓங்குக!''

என்ன செய்வது? மக்களுக்கெல்லாம் ஒரே குழப்பம். இதனிடையில் மூக்கனுடைய கட்சியின் எதிர்க் கட்சிக்காரர்கள் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் திட்டத் தொடங்கினார்கள்!

''மதியில்லா அரசாங்கம்; மக்களை வஞ்சித்த ரப்பர் மூக்குக்காரனுக்கு ''நாசிகப் பிரமுகன்'' என்று பட்டம் சூட்டிற்று வைரம் கட்டிய தங்கப்பதக்கம் கொடுத்தது. இப்படி மக்களை வஞ்சித்ததில் ஜனாதிபதிக்கும்பங்கு உண்டு. இந்தப் பெரிய சதி வேலையில் ஒரு சூழ்ச்சி இருக்கிறது. ஜனாதிபதி ராஜிநாமா செய்ய வேண்டும்! மந்திரி சபை ராஜிநாமா செய்ய வேண்டும். ரப்பர் மூக்கனைக் கொல்ல வேண்டும்!''

இதைக் கேட்டு ஜனாதிபதி கோபமுற்றார். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் காலையில் பட்டாள மும் டாங்கிகளும் மூக்கனு டைய வீட்டை முற்றுகை யிட்டன. மூக்கனைக் கைது செய்து கொண்டு போனார் கள்.

பிறகு அநேகநாட்களுக்கு மூக்கனைப் பற்றிய எந்தச் செய்தியும் இல்லை. மக்கள் மூக்கனை மறந்தனர். ஆனால், திடீரென்று வந்தது அணுகுண்டு! என்னவா? மக்கள் மறந்து விட்டபோது, ஜனாதிபதியின் ஒருசிறிய அறிவிப்பு வந்தது!

"மார்ச் 9ம் தேதி 'நாசி கப்பிரமுகர்' பற்றிப் பகிரங்க விசாரணை நடக்கும். 48 நாடுகளின் பிரதிநிதிகளாக வரும் கைதேர்ந்த டாக்டர்கள் மூக்கனைப் பரிசோதிப்பார்கள். உலகின் எல்லாப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். இந்த விசாரணையை எல்லா மக்களும் செய்திப்படமாகக் காணமுடியும். மக்கள் அமைதியாகவருக"

ஜனங்களா - அவர்கள் அமைதியாக வரவில்லை. அவர்கள் தலைநகரில் திரண்டு கூடினர். ஹோட்டல்களைத் தாக்கினர். வண்டிகளைத் தகர்த்தனர். பொலீஸ் ஸ்டேஷன்களுக்குத் தீ வைத்தனர். அரசாங்கக் கட்டடங்கள் நாசமாக்கப்பட்டன, அநேகமதக் கலவரங்கள் நடந்தன. ஏகப்பட்ட பேர் இந்த மூக்கன் போராட்டத்தில் தியாகிகளானார்கள்.

மார்ச் 9 – பதினொரு மணியளவில் ஜனாதிபதியின் மாளிகைக்கு எதிரில் ஒரு மக்கள் சமுத்திரமே குழுமியிருந்தது. அப்போது ஒலிபரப்பிகள் முழங்கின.

"மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் பரிசோதனை ஆரம்பித்து விட்டது!"

ஜனாதிபதிக்கும், அநேக அமைச்சர்களுக்கும் முன்னிலையில், டாக்டர்கள் மூக்கனைச் சுற்றி நின்றனர் ஒரு டாக்டர் மூக்கனுடைய மூக்கின் வாயை அடைத்தார். அப்போது மூக்கன் வாயைத் திறந்தான். இன்னொரு டாக்டர் மூக்கினின் மூக்கின் நுனியில் குத்தினார். அப்போது, அதிசயம் என்று தான் கூறவேண்டும். மூக்கனின் மூக்கின் நுனியிருந்து ஒருதுளி ரத்தம் கசிந்தது.

"மூக்கு ரப்பரல்ல இயற்கை!" டாக்டர்கள் ஏகமனதாகத் தீர்ப்பு கூறினர். மூக்கனின் காரியதரிசிப் பெண் மூக்கனின் மூக்கின் நுனியை முத்தம் கொடுத்தாள்.

"தோழர் மூக்கன் ஜிந்தாபாத்! நாகிகப் பிரமுகன் ஜிந்தாபாத்! தோழர் மூக்கனின் மக்கள் முன்னேற்றக் கட்சி ஜிந்தாபாத்!"

இந்த ஆர்ப்பாட்டம் அடங்கியவுடன், ஜனாதிபதி இன்னொரு யுக்தி செய்தார்! மூக்கனைப் பார்லிமெண்டுக்கு நியமனம் செய்தார். இது இப்படி முடிந்தாலும், மூக்கன் கிடைக்காத கட்சிக்காரர்கள் ஒரு ஐக்கிய முன்னணியாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்:

"மந்திரிசபை ராஜினாமா செய்ய வேண்டும்! மக்களை ஏமாற்றசதி! ரப்பர் மூக்கு!" பொய்யின் போக்கைப் பார்த்தீர்களா? குழப்பம் ஏற்படாமல் இருக்குமா? பாமர மக்கள் என்ன செய்வார்கள்?

தமிழாக்கம்:–

ரா. ராதாகிருஷ்ணன்

நன்றி: கல்கி

JANTHIRAMS
FOR
Crank Shaft Crinding
Cylinder Reboring
Line Boring
336, CLOCK TOWER ROAD.
WELLINGTON JUNCTION,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திசை'யின் திசைகளில்

மணிக்கொடிகாலம், ஈழகேசரிகாலம் என்பது போல திசைக்காலம் ஒன்று உருவாகுமா?

□ 14.01.1989 ல் திகதி சனிக்கிழமையில் இருந்து ''திசை'' என்னும் வாரப் பத்திரிகை வெளிவருகின்றது (இப்போதுபத்திரி வெள்ளிக்கிழமையும்)

''சற்றலைற்றிவியூ'' நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடப்படும் இவ்வாரப் பத்திரிகை கடந்த யூலை மாதம் வரை ''29'' இதழ்கள் வெளியாகி உள்ளன.

தொடர்ந்து வெளியாகும் இப்பத்திரிகையின் 29 இதழ்கள் பற்றிய மீளாய்வுப் பார்வை இங்கு இடம் பெறுகின்றது. ●

1) பத்தோடு பதினொன்றாக இல்லாமல் எதிர்பார்த்தது போலவே திசையின் முதல்இதழ் அமைந்துள்ளது. ஆக்கபூர்வமான, அறிவுசார்ந்த கட்டுரைகள், காத்திரமான இலக்கியப் படைப்புக்கள், கவிதைகள், அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், விளையாட்டு எனப்பல துறை சார்ந்ததாக திசையும் அமையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு உள்ளது. ''மணிக்கொடி காலம் போலவும் ஈழகேசரி பொன்னையா காலம் போலவும் திசைக்காலம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற பெரு விழைப்பு முதலாவது இதழின் ஆசிரியர் கருத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

2) கட்டுரைகள் பெரும்பாலும் மொழி பெயர்ப்பு அல்லது மீள் பிரசுரம். தரமான சொந்தக் கட்டுரைகள் இடைக்காலிடின் இது தவிர்க்க முடியாததே.

3) அ. ரவியின் ''இப்படி ஒரு காலம்'' சிறுகதை ஒன்று திசையில் பிரசுரமாகியுள்ளது. எவ்வளவு பொறுமை வேண்டும். வாசிப்பதற்குத்தான்.

4) சமூக சேவையாளர்களைப் பற்றி நல்ல தொரு ஆசிரியர் தலையங்கம் இடம் பெற்றுள்ளது. ''மக்கள் சேவைக்குள் புகுந்து கொண்டு ஆடும் சந்தர்ப்பவாதிகளை இனம் காணுவது போலவே சந்தர்ப்பவாத எழுத்தாளர்களையும் இனம் காண வேண்டும்.''

5) ரஞ்சகுமாரின் ''ஆட்கொல்லி'' குறு நாவல் ஆரம்பம். ரஞ்சகுமாரின் கதைகளில் தென்னிந்திய வாசம் கொஞ்சம் அடிக்கின்றது.

6) அதிக புனைபெயர்கள் என்பது பற்றிய குறிப்பு உள்ளது. ''ஆடையைக் கொண்டு மனிதனைக் கணிப்பிடலாமா?'' என்ற கட்டுரையை எழுதியவரின் புனைபெயர் போன்றபுனைபெயர்கள் தேவைதானா?

7) திசையில் வெளியாகும் செய்திகளும் அவற்றுக்கு இடப்படும் தலைப்புக்களும் பல வேளை தரமானதாக இல்லை. மிகமிகச் சாதாரணம். கிண்டல் தேவைதான். ஆனால்.....புதிய அமைச்சர்கள் பிரேமாவின் சாணக்கியம் என்ற செய்தியே இதற்கு உதாரணம். வேறு உதாரணங்கள் அடுத்த வாரத்து விளக்குமாறு – பியோன் செய்தி.

8) ஏழு வாரங்களாக வெளிப்பு நிறமாகத்

சண்முகவடிவேலன்
+
செல்வி. சித்திரகுமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்த திசையின் பெயர் திடீர் என நீலமாக மாறிவிட்டது. இவப்பாக இருந்தால் தங்களை ஏனையவர்கள் ஒரு மாதிரி நோக்குவார்கள் என்ற நினைப்பா? (பின்னர் வாரம் ஒரு வர்ணம்.)

9) தமிழ்ச் சினிமாவின் இயக்குனர்கள் இருவரைப் பற்றிய ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. பாரதிராஜாவும் மணிரத்தினமும் நம்பிக்கைக்குரிய கலைஞர்களா? யாருடைய நம்பிக்கைக்கு?

10) ''இலங்கையில் சித்திரவதைகள்'' கட்டுரையையும் ''ஒரு தாய் தலை குனிகிறாள்'' கவிதையையும் படித்து முடிக்க நெஞ்சில் உண்டான உணர்வுகளை விபரிக்க முடியவில்லை.

11) அலை ஆசிரியர் அ. யேசுராசாவின் எழுத்தின் அடிப்படையை ''எழுத்தாளர் பட்டறை'' என்னும் கட்டுரையில் அவர் பேசியதாகக் கூறப்படும் பகுதியில் இருந்து அறிய முடிந்தது. ''இருப்பியல் வாதம்'' அன்னிய மாதல் என்பனதான் அவை.

12) இலங்கை அரசியல் வரலாற்றில் இடதுசாரிகள் சாதித்தவை? என்ற கட்டுரை ஒரு உபயோகமான கட்டுரை. படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்று சும்மாவா சொன்னார்கள்.

13) ''வரதர்'' எழுதிய ''சுற்பு'' சிறுகதை மீள் பிரசுரமாகி உள்ளது. அருமையான கதை. எந்தவிதமான சிக்கலும் இல்லாமல்படித்து முடித்த கதை. பலதரப்பட்ட எழுத்தாளர்களின் அறுவைச் சிறுகதைகளைப் படித்த (அறுவையாக எழுதாவிட்டால் திசையில் பிரசுரிக்க மாட்டார்களா) எமக்கு ஒரு மாறுதல்.

14) தொடர்ந்து இரண்டாவது வாரமாக கேலிச்சித்திரம் வெளியாகியுள்ளது, ''அதிர்ஷ்டகரமான ரிக்கற்'' என்னும் சிறுகதை இதுவரை திசையில் வெளியாகியுள்ள கதைகளில் மிகச் சிறிய சிறுகதை. (வேடிக்கை அல்ல உண்மையாகத்தான்) ஆனால் ஒன்று நமது எழுத்தாளர்கள் இப்படி ஒரு கதையை எழுதியிருந்தால் திசை அதனைப்பிரசுரிக்குமா?

15) நமது இளையமட்டங்கள் வாயைப் பிளந்து பார்த்து ரசிக்கும் ஆங்கிலப் படங்கள் பல. அத்தகைய படங்களில் ஒன்றான ''தடெல்ராஃவோல்'' என்னும் படத்தின் பின்னணியை விளக்கும் நல்லதொரு கட்டுரை.

16) ''ஆலயமணி'' சஞ்சிகையினைப் பற்றிய விமர்சனத்தில் முக்கியமான ஒன்றைப் பற்றி விமர்சகர் குறிப்பிடாமல் விட்டுவிட்டார். சஞ்சிகையின் விலைதான் அது. சஞ்சிகை வெளியிடுபவர்கள் எல்லோரும் யானைவிலைக்கு அவற்றை விற்றால் என்ன செய்யலாம்?

17) நல்லதொரு விமர்சனக் கட்டுரை இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. கோகிலா மகேந்திரன் எழுதிய ''தூவானம் கவனம்'' நாவல் பற்றி எம் ஏ. நுஃமான் எழுதிய விமர்சனக் கட்டுரை தான் அது.

18) ''ராலய'' நொவம்பர் இதழில் மடிகே பஞ்ஞாஸீஹ சுவாமிகள் எழுதியுள்ள கட்டுரைக்கு பதில் எழுத பத்திரிகைகளில் திசையால் தான் முடிந்தது.

19) ''கலை வடிவங்களைச் சமூக முன்னேற்றத்திற்குப் பயன் படுத்துவது என்ற வகையில் இவ்விரு நிகழ்ச்சிகளும் வரவேற்பைப் பெறுவனவாகும்'' என்று ''சித்ரா'' எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. மீண்டும் ''உமா வரதராஜனின்'' தமிழ்ச் சினிமா பற்றிய கட்டுரை.

20) தமிழர்களைச் சிந்திக்க வைக்கும் ஆசிரியர் தலையங்கம். தமிழ்ப் பேரினவாதம் என்ற தலைப்புக் கூட நன்றாக அமைந்து விட்டது. ''தேடலும் படைப்புலகமும்'' என்ற நூல் பற்றிய விமர்சனம் இடம் பெற்றுள்ளது. ''தமிழ் நாட்டில் கூட ஓவியக்கலை பரவலாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படாத போதும் ஈழத்தில் ஓவியம் என்ற சாதனத்தை அறிவுபூர்வமாகவும் அனுபவபூர்வமாகவும் புரிந்து கொண்டிருக்கிற விமர்சகர்கள் இருக்கிறார்கள்'' என விமர்சகர் எஸ். என். வெங்கட்ராமன் எழுதியிருப்பது மனநிறைவைத் தருகின்றது.

21) ''செய்திகளைப் பரபரப்பூட்டும் வகையிலோ, உணர்ச்சி வசப்படுத்தும் வகையிலோ வெளியிடாமல் நிதானமான முறையில் மேற் கொள்ளல்'' என்று ''தொடர்பு சாதனங்கள் - பிரச்சனைகளும் தீர்வுகளும்'' என்ற தலைப்பின் கீழ் வெளியான செய்தியில் வருகின்றது. இது ஒரு முக்கியமான விடயமாகும். ஆனால் ''திசை'' சில வேளைகளில் இதனைக் கைவிட்டு விடுகின்றது போலும்.

22) 1988ன் சிறந்த படமான ''பிறவி'' பற்றிய கட்டுரை ஒன்றும் அப்படத்தின் இயக்குனரின் பேட்டியும் இடம் பெற்றுள்ளது. (இந்தியா ருடே சஞ்சிகையில் இருந்து எடுக்கப்பட்டது. ''முற்றிலும் நேர்மையான வாழ்க்கையை எம்மால் வாழ முடியாதிருப்பது ஏன்'' என்ற கேள்வியில் இருந்தே சமகாலத்து சீர்கேடுகளின் தாக்கத்தினை (இங்கும் தான்) உணர முடிகின்றது.

23) மீண்டும் நல்லதொரு சிறுகதை. பிரான்சிஸ் சேவியரின் எதிரொலி தான் அது. திசையில் மறுபிரசுரம் என்ற பெயரில் வெளியாகும் சிறுகதைகளே நன்றாக அமைகின்றன. ஏனையவை நன்றாக அமைகின்றனவோ இல்லையோ ஒரே இழுவல் தான்.

24) தமிழின் தனிப் பிரச்சினைகள் என்ற தலைப்பில் சுந்தரராமசாமி அவர்கள் எழுதிய கட்டுரை மறுபிரசுரமாகியுள்ளது. பயன் உள்ள பல கருத்துக்கள் அதில் உள்ளன.

திருமணம்

எவன் சொன்னான்
திருமணங்கள்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுவ தென்று
மதவாதிகளே .....
அறிவுலக மேதைகளே
நீங்கள் சொல்லுங்கள்
திருமணங்கள்
சொர்க்கத்திலா .....
பெண் வசமுள்ள நரகத்திலா
நிச்சயிக்கப்படுகிற தென்று .....!

-நெடுந்தீவு லக்ஸ்மன்-

25) திசையின் சித்திரை மாதத்துச் சிறுகதைகள் பற்றிய விமர்சனக் கட்டுரை ஒன்று உள்ளது. (குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நடந்த விமர்சன அரங்கில் இடம் பெற்ற விமர்சன உரை) ''இலக்கியங்கள் அவற்றைப் படிக்கும் வாசகர்களின் மனத்தைச் செம்மைப் படுத்துவனவாகவும் அவர்களைச் சரியான திசையில் சிந்திக்க வைத்து நெறிப்படுத்துவனவாகவும் அமைதல் வேண்டும். அதே வேளை அவை வெறும் போதனைகளாக அமையக் கூடாது'' என ஆ. மகாதேவன் அவர்கள் கூறியது சுவனத்திற்குரியது.

26) தூவானம் பகுதியில் ''நீலாம்பரன்'' அவர்கள் எழுதிய கருத்துக்கள் முக்கியம் பெறுகின்றன. வெள்ளி விழாவினை அண்மிக்கும் மல்லிகை ஆயிரம் பிரதிகளையும் பதின்மூன்று வருடங்களாக வெளிவரும் அலை ஐந்நூறு பிரதிகளையும் விற்பனையில் தாண்டாத தற்கு என்ன காரணம்.

27) சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. ரஞ்சகுமாருக்கு முதற் பரிசு. உமா வரதராஜன், எம். எல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். மன்சூர், சிறிதரன், நந்தினிசேவியர் போன்றோர் இப் போட்டிக்கு எழுதவில்லையா?

22) ஏனைய பத்திரிகைகளில் முன்னரே பார்த்த செய்திகள் இந்தவார எட்டுப் பக்க திசையில் இரண்டு பக்கங்களை நிரப்பியுள்ளன. இரண்டு பக்கங்களில் கதை.

23) நாவாணம் பகுதியில் நீலாம்பரன் அவர்கள் பின்வருமாறு குற்றம் சாட்டுகின்றார்.

''வினம்பரம் சேர்த்துத் தத்தவர்கள், 5, 10 பிரதிகள் விற்றுத் தருபவர்கள், நன்கொடை தருபவர்களைத் திருப்திப்படுத்த முனையும் வியாபார மனோபாவத்தினாலும் தரமற்ற கவிதைகள் வெளியிடப் பட்டு வருகின்றன.''

மேற் குறிப்பிடப்பட்ட குற்றச் சாட்டு உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் ஒரு சந்தேகம், 7 - 7 - 89ம் திகதியிட்ட திசையில் நீலாம்பரன் ஈழத்துச் சஞ்சிகைகள், நூல்களின் விற்பனை பற்றிக் கவலைப் பட்டுள்ளார்.

அவரது இவ்வாரக் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் ஒரு சில சஞ்சிகைகளாவது விற்பனையில் நிதளவாவது அதிகரித்திருக்க வேண்டுமே.

முனைப்பாக சில விடயங்களைக் குறிப்பிட்டாலும் பொதுப்படையாகவே சில கருத்துக்களை இங்கு கூறவேண்டியது எமக்கு அவசியமாகிறது.

மூன்று தினசரிகளும், அவற்றின் வார இதழ்களும் நமது பிரதேசத்திலிருந்து வெளிவந்தாலும் காத்திரமான, அறிவுத் தேடலுக்குத் துணை புரியக் கூடிய முழுமையான பத்திரிகை இல்லாமல் இருந்தது உணரக் கூடியதாக இருந்தது.

வெறும் சாம்பார்தனமாக இல்லாமல் கலை, இலக்கியம், விஞ்ஞானம், பொருளாதாரம், விளையாட்டு எனப் பல துறைகளையும் தன்னகத்தே கொண்டு ஆரோக்கியமான வாசிப்பும், நேரிய தேடலும் உடைய வாசகர்களுக்குத் துணை புரிவதாக 'திசை' அமைந்துள்ளது மறுக்க முடியாத ஒரு விடயமே.

இவ்வளவு காலமும் இருந்த ஒரு மாபெரும் வெற்றிடம் இதனால் ஓரளவாவது நிரப்பக் கூடிய சாத்தியப்பாடு உள்ளது. திசையின் பணி மேலும் சிறப்புப் பெற்றால் அந்த வெற்றிடங்களை முழுமையாக திசையினால் நிரப்பமுடியும்.

பல விடயங்களில் திசை முழுமையாக இருந்தாலும் செய்திகள், கவிதைகள், சிறுகதைகள் என்பனவற்றைப் பொறுத்தவரையில் சில நெருடல்கள் உள்ளன.

ஆரம்பகாலத் திசையின் செய்திகள் திருப்புமுனைத் தன்மை கொண்டனவாக இருந்தாலும் தற்போது சிறிது மாற்றமேற்பட்டுள்ளது. என்றாலும் கூட செய்திகளைப் பிரகடனப்படுத்துவதில் கூடிய கவனமெடுத்தல் வேண்டும்.

இல்லாவிடின் திசையின் வெளிப்பக்கத்திற்கும் அதன் உள்ளுடனுக்கும் பொருத்தமில்லாத நிலை ஏற்பட்டு விடும்.

என்னதான் பலதரப்பட்டவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தாலும் வெளியாகும் படைப்புக்களுக்குப் பொதுவான ஒரு 'சரடு' தென்படுகிறது.

சிறுகதைகள், கவிதைகள் போன்றவற்றிலேயே இத்தன்மை முழுமையாகத் தென்படுகிறது. இன்னும் வெளிப்படையாகச் சொன்னால் ''அலை'' சஞ்சிகையின் சாயல் தென்படுகிறது.

இங்கு அலை சஞ்சிகையினை நாம் குறைத்து மதிப்பிடவில்லை. அது மிகக்கனதியான இலக்கியச் சஞ்சிகை. எத்தகைய இடர் வந்தபோதும் அது தனது கொள்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை. தனது கொள்கைக்கேற்ப பெறுமதி மிக்க இலக்கியப் பணிபுரிந்து வருகின்றது.

ஆனால் ''அலை'' சஞ்சிகைக்குச் சில வரையறைகள் இருக்கும். தன் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வரித்துக் கொண்டவர்களுக்கு மாத்திரம் களம் அமைத்துக் கொடுக்கும். இவ்விதம் திசையும் இருக்கலாமா?

படைப்பாளிகளின் சொந்த அகநிலைப்பட்ட அனுபவங்களைக் கொண்ட படைப்புகளுக்கு இன்னும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமானால் தனிமனித பீற்றல்களுக்கு அலையில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டன.

அதுகாரணமாக குறிப்பிட்ட (வீரல் விட்டு எண்ணக் கூடிய) எழுத்தாளர்களின் படைப்புக்களே அலையில் இடம் பெற்றன. அவர்களையே அலை ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களாகக் குறிப்பிடுகின்றது. அவர்களையே திசையும் இப்போது வரித்துக் கொண்டுள்ளது.

அகநிலைப்பட்ட அனுபவங்கள் இலக்கியங்கள் அல்ல என்று நாம் இங்கு சொல்ல வரவில்லை. ஆனால் புறநிலைப் பிரக்ஞையற்ற அகநிலைகளால் என்ன பிரயோசனம் (இதுபற்றி இங்கு ஆராய்வது எடுத்துக் கொண்ட விடயத்திற்கு பொருத்தமில்லாமல் போய்விடும்)

அலை அவ்விதம், இருக்கலாம். ஆனால் திசை அவ்விதம் இருக்கலாமா? திசை ஆசிரியருக்கோ, ஆசிரியர் குழுவில் உள்ள அ. யேசுராசா அவர்களுக்கோ தனிப்பட்ட சில சருத்துக்கள் உண்டு. இருப்பியல் வாதத்தில் (EXISTENTIALISM) அக்கறை கொண்டு அவர்கள் இருப்பைத் தேடலாம். ஆனால் திசையில் அத்தன்மை வெளிப்படாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

யேசுராசா அவர்களிடம் உள்ள அதீதமான பண்பு பம்மாத்துத்தனங்கள் அதிகமில்லாதவர் என்பது மட்டுமல்ல, தான் சார்ந்த இலக்கியத் துறைகளில் விசுவாசம் கொண்டவர். தேடலும் ஆர்வமும் உள்ள இலக்கியவாதி. ஏனைய இலக்கியவாதிகளின் சின்னத்தனங்களைக் கண்டு கண்மூடி இருக்க முடியாதவர்.

அவ்வாறே அலையில் தன் பார்வையோடு ஒத்துப் போகக் கூடிய இலக்கியப் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டு அவையே தரமான படைப்புக்கள், அவற்றினை எழுதுபவர்களே ஈழத்தின் தலை சிறந்த படைப்பாளிகள் என்று கூறுபவர்.

ஆனால் இத்தன்மை திசையில் வெளிப்படக் கூடாது. அப்படி வெளியிட்டால் சில குறிப்பிட்ட வரையறைக்குள் திசையின் தாக்கமும் வீக்கமும் மட்டுப்படுத்தப்பட்டு விடும்.

அலை எவ்விதம் பதினைந்து ஆண்டுகளாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்விதமான அபாயம் திசைக்கும் நேரலாம்.

திசையை வாசிப்பவர்கள் எல்லோரும் இலக்கியவாதிகளல்லர். எழுதப்படும் எல்லாப் படைப்புகளும் இலக்கியவாதிகளுக்காகவா எழுதப்படுகின்றன.

மிகவும் எளிமையாக இல்லாவிடினும் கூட சாதாரண வாசகர்கள் அவற்றினைப் படிக்க வேண்டும். இது எனது உன்னதமான கலைப் படைப்பு என எழுதியவரும் ஏனைய சிலரும் கூறலாம். ஆனால் மௌனியையோ; லாசராவையோ எல்லோராலும் புரிந்து கொள்ள முடியுமா?

ஜனனி எழுதிய ''இருள்'' அ. ரவி எழுதிய ''இப்படி ஒரு காலம்'' அல் அஸுமத் எழுதிய ''வம்சத்து வம்சம்'' போன்ற (வேறும் உண்டு) சிறுகதைகளை எல்லோராலும் விளங்கிக் கொள்வது கஷ்டமான காரியமே.

அறிவு எதிர்ப்புவாத அடிப்படையில் இக்கருத்துக்களை இங்கு நாம் குறிப்பிடவில்லை. ''புரிந்துகொள்ளல்'' பற்றிக் குறிப்பிட்டால்..... கேலியாக அக்கருத்துக்களை எடுத்து கொள்வதும் தவறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தரமானவற்றையே பிரசுரியுங்கள். ஆனால் உங்கள் சொந்தக் கருத்துக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு படைப்புக்களைத் தெரிவு செய்யாதீர்கள்.

பழைய அலை ஒன்றில் ''பயணி'' (அ. யேசுராசா) எழுதிய குறிப்புக்களில் ''புதிய கோணத்தில் (?) இவர் வீரகேசரி வாரவெளியீடுகளில் எழுதும் கட்டுரைகள் வாசகருக்கு மட்டுமல்ல அவருக்கே விளங்காதவைதான்'' என கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் எழுதும் கட்டுரைகள்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால்தான் அலையில் கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் எழுதவில்லைப் போலும். இருந்தாலும் இப்போது திசையில் அவர் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அது வரவேற்கப்பட வேண்டிய விடயமே.

இவ்விதமான மனப்பாங்கு ஏனைய படைப்புக்களைப்படைக்கும்படைப்பாளிகள் விடயத்திலும் கைக்கொள்ளப்படல் வேண்டும்.

அத்துடன் விளங்காத கட்டுரைகளை யேசுராசா அவர்கள் என்ன பார்வையில் பார்க்கின்றாரோ அதே பார்வையில் சிறுகதை, கவிதை போன்றவற்றையும் பார்க்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

திசை ஈழத்து இலக்கியத் துறையில் மிக உன்னதமான இடத்தினை வகிக்கும் என்ற ஆழமான எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றோம். ○

சுமைகளின் சுவடுகளைத் தொடர்ந்து!.....

காற்று மலராகப் பூத்துக் கொள்ளும்
நம் தலைமுறை
போலவே
நேற்றைய இரவுகளில்
இழந்தவை ஆயிரமாயிரமாய்
ஆயினும்
நீண்ட தலைமுறை
நாளை எழும்
அ:தினில் புதியதாய்
விடியலும் மலரும்...

○○○○○

சுமைகளினால்
சோர்ந்து போகும்- மானிடர்
ஆயினும்; ஆயினுமாய்
இழப்பின் சுமைகளால்
சுவடுகளையும் பதித்தீடுவர்
நம்மவர்- ஈழவர்

○○○○○

புதிய வானத்தில் நேற்றுப் பூத்த
காளானின் கணுக்களிடை
நாமுமாய்
மலர்ந்து கொள்கின்றோம்
இன்னமும் விடியாது
காமக்கோழிகள் கூக்குரல்
கொள்ளும்.. .....
நாமும் மலர்ந்து கொள்வோம்.

○○○○○

என் ஜீவியத்தின்
இழப்பாக தேசமதை
மீட்கையில் மரணிப்பதால்
நேசங் கொள்கிறேன் ..
புதிய விடியலில்
போர் முகாரி கொள்வோம்

○○○○○

இன்னமும் இவ்வழியே
ஆயிரமாயிரமாய் எழுந்து
கொள்வர் .....
ஏந்திய கரங்களுடன்
எழுச்சியை நோக்கியே
அணி திரள்வர்.....

○○○○○

காற்று மலராகப் பூத்துக்
கொள்கையில்-
நாமும எழுந்து கொள்கின்றோம்
நேற்றைய சுமைகளின்
சுவட்டினைத் தொடர்ந்தே!.....

-யாழூர் இளங்குயில்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலக்கியா'வின் இலக்கியப் பக்கங்கள்



★ சிறு சஞ்சிகைகளின் பெரிய விலைகள்

இப்போது நம் மத்தியில் பல்வேறு இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. அவற்றில் நீண்டகால மாசத் தொடர்ந்து வருபவற்றை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆனால் அந்தப் பட்டியல் தான் இப்போது மிக முக்கியமான விடயம் அல்ல.

தொடர்ந்து வெளிவரும் இத்தகைய ஒரு சில சஞ்சிகைகளை விட முதலாவது இதழுடனும் இரண்டாவது இதழுடனும் அமரத்துவம் ஆகிவிட்ட சஞ்சிகைகள் ஏராளம்.

வேறு சில வருடத்திற்கு ஒரு தடவையேனும் வெளியாகி தாம் இருப்பதை ஞாபகப்படுத்தி விட்டு மீண்டும் தலைமறைவாகி விடும்.

நமது இலக்கிய வரலாற்றினைப் பார்த்தால் சஞ்சிகைகளின் தோற்றம் மறைவுக் குறிப்புகளே அதிகமாக உள்ளன. இது பெருமைப்படும் விடயம் அல்ல. பெரும் வேதனையை உருவாக்கும் ஒரு செயற்பாடு ஆகும்.

உண்மையில் நம் இனத்தின் மத்தியில் வெளியாகும் சஞ்சிகைகள் நமது மக்களால் வளர்த்தெடுக்கப்படாமல் அழிந்து போவதற்குரிய அடிப்படைக் காரணங்கள் என்ன? இதுபற்றி ஆராய வேண்டியது எல்லோரது கடமையாகும்.

பல்வேறு காரணங்களை நாம் அடையாளம் காணமுடியும். அவற்றில் மிக முக்கியமான ஒரு காரணத்தினை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

நம் மத்தியில் வெளியாகும் சிறு சஞ்சிகைகளின் விலையினை சற்றுக் கவனியுங்கள். வெள்ளிவிழா ஆண்டை அண்மிக்கும் **மல்லிகை** (1/8 டிமை சைஸ், பக் 56) 6/-, 15 ஆண்டுகளாக வெளிவரும் ''நான்'' சஞ்சிகை (1/8 டிமை சைஸ், பக் 40 4/-, 13 ஆண்டுகளாக வெளிவரும் **அலை** (1/4 டிமை சைஸ் பக்30)8/-, **உள்ளம்** (1/4கிறவுண் சைஸ் பக் 32) 5/-, **முனைப்பு** (1/4 டிமை சைஸ் பக் 28) 8/-.

13 வருடங்களாக வெளிவரும் ''அலை'' யும் தற்போது வெளியாகும்'' ''முனைப்பு'' ம் 8/- விலையில் வெளியாகின்றன.

இந்த விலை கொடுத்துச் சாதாரணமான வாசகர்கள் இச் சஞ்சிகைகளை வாங்குவார்களா? இது பற்றிச் சற்று யோசிக்க வேண்டும்.

அலை (500 பிரதிகளும்) **முனைப்பு** (எத்தனை பிரதிகள் என்று தெரியவில்லை) போன்ற சஞ்சிகைகளை எழுத்தாளர்களும் (எல்லோரும் அல்ல ஒரு சிலர் தான். பலர் காசு கொடுத்து வாங்காமலே ஓசியில் படித்து விடுவார்கள்) இலக்கிய ஆர்வமுள்ள சிலரும் தான் வாங்குவார்கள். ஏனையவர்கள் எட்டியும் பார்க்கமாட்டார்கள்.

வெறுமனே சஞ்சிகைகளை வெளியிடுவதாலோ அல்லது சஞ்சிகை ஆசிரியர்கள் என்ற பெயரை மாத்திரம் பெற்று விடுவதாலோ எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

பிரசுரிக்கப்படும் சஞ்சிகைகளைச் சாதாரண வாசகர்கள் மத்தியில் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல வேண்டும். அதுவே முக்கியம்.

இந்த மண்ணிலே வெளியாகும் எந்தச் சஞ்சிகையும் வியாபார நோக்குடன் லாபத்தினை அடிப்படையாகக் கொண்டு வெளிவருவன அல்ல.

புதினத்தாள் + அச்சுக் கூலி இவற்றினை அடிப்படையாக வைத்தே சஞ்சிகைகளின் விலையினை தீர்மானிக்கின்றார்கள். மொத்தச் செலவினையும் வரையறுக்கப்பட்ட பிரதிகளுக்குள் பெற்று விட முடியாது.

பிரதிகளை அதிகரிப்பதன் மூலம் விலைகளைக் குறைக்க முடியும். தீவிரமான பிரயாசையும். தொடர்ச்சியான நெருக்குதலாலுமே சஞ்சிகைகளை விற்பனை செய்யமுடியும்.

என்னுடைய சஞ்சிகையின் விலை இதுதான். விருப்பமானால் வாங்கிக் கொள் என்று இருந்தால் சஞ்சிகையின் ஆசிரியர் என்ற பெயரை மாத்திரம் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் பரந்துபட்ட வாசகர்களைச் சென்றடைய முடியாது.

ஒரு வசதிக்காக எழுத்தாளர்களாக நமது எழுத்தாளர்கள் பலர் இருப்பது போல (சென்ற இதழ் இலக்கியப் பக்கங்களில் குறிப்பிட்டது போல்) வசதிக்காகவே சஞ்சிகை ஆசிரியர்களாக பலர் உள்ளனர்.

வாசகர்களைப் பற்றி எழுத்தாளர்கள் எந்தக் கவலையும் இல்லாமல் வெறும் வரட்டுத்தனமாக (பிரசாரப் படைப்புகளாக) தனிப்புலம்பல்களாக (கலைப்படைப்புகள் என்று சொல்லிக் கொண்டு) தமது இலக்கியப் படைப்புகளைப் படைப்பது போல சஞ்சிகை ஆசிரியர்களும் இருந்து விடுவது தான் கவலைக்குரிய விடயமாகும்.

தரமான, காத்திரமான இலக்கியப்படைப்புக்களுடன் சஞ்சிகைகளை வெளிக் கொண்டு வருவது போலவே மக்களிடம் அவற்றினைக் கொண்டு செல்வதும் மிக மிக முக்கியமான ஒரு நடவடிக்கை ஆகும். சஞ்சிகை ஆசிரியர்களே இது பற்றிச் சிந்தியுங்கள்.

★ மதிப்புக்குரிய எழுத்தாளர் க. சட்டநாதன் அவர்களிடம் ஒரு சந்தேகம்?

நீங்கள் எழுத்தின் மிக முக்கியமான சிறுகதையாளர்களில் ஒருவர். மல்லிகையின் இருபத்தி நான்காவது ஆண்டு மலரில் நீங்கள் எழுதிய ''உலா'' என்னும் சிறுகதையினை படித்து முடித்தவுடன் மனத்தினை என்னவோ ஒன்று நெருடியது. அது காரணமாகவே இதனை எழுதுகின்றேன்.

அந்தக் கதையில் தேவையில்லாத ஒன்று திருத்தித் கொண்டு இருப்பது போலத் தோன்றுகின்றது.

ஆண்டு இரண்டில் படிக்கும் ''மது'' வின் உலாவாகச் செல்லும் கதையில்

''.....கூட்டத்துக்கு அப்பாலுள்ள அறையில் ஏதோ சத்தம் கேட்டது. ஆழ்ந்த யோசனையிலிருந்த மது உசாரடைந்தான். வராந்தாவில் இருந்து இறங்கி அந்த அறையை நோக்கி நடந்தான்.

கதவு நீக்கலால் உள்ளே பார்த்தான்.

யோசு அன்ரியும் தவம் மாமாவும் கட்டிலில். அன்ரி வெம்பாய் தம்பலப் பூச்சி மாதிரி..... சேலையெல்லாம் குலைந்தபடி மாமா கறுப்பா ..தேகம் முழுவதும் ரோமம் அடர்ந்து ஒரு பொட்டுத் துணி கூட இல்லாமல்.

''இந்த அன்ரிக்கும் மாமாவுக்கும் வெக்கமேயில்லை என்று உதடை அஷ்ட கோணமாக்கியவன் அந்த அறையை அவர்களை ஏறிட்டுப் பார்க்கக் கூடக் கூச்சப்பட்டவனாய் ஒருவகை அச்சத்துடன் வந்த வழியே மெதுவாகத் திரும்பி நடந்தான்'

என்ற பகுதியும் வருகின்றது. கதையில் மேற்படி பகுதியை நீக்கிவிட்டால் கதைக்கு எந்தவிதமான பாதிப்பும் வந்துவிடாது.

''உலா'' எனும் இச் சிறுகதையில் என்ன நோக்கத்திற்காக அந்த இளம் குருத்தின் பார்வையில்மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி கட்டில் காட்சியை சேர்த்தீர்கள்.

ஏதாவது காரணம் இருக்கும் என நம்புகின்றேன். எனக்குப் புரியவில்லை. பல நண்பர்களும் அவ்விதமே சொன்னார்கள். எமது சந்தேகத்தினைத் தவறாது போக்குவீர்கள் என எதிர்பார்க்கலாமா?

□ "வரதரின்" 65 வது பிறந்தநாள் விழா

மறுமலர்ச்சிக் கால எழுத்தாளரான "வரதர்" அவர்களின் 65வது பிறந்தநாள் விழா 01-7-89 ம் திகதி திரு. நா. சோமகாந்தன் (ஈழத்துச் சோமு) அவர்களின் இல்லத்தில் நடைபெற்றதாக அறிகின்றேன்.

மிக்க மகிழ்ச்சி. மதியபோசனத்துடன் கூடிய விழாவாக இருந்தபடியால் அவ்விழாவுக்கான அழைப்புக்கள் பகிரங்கமானவையாக இருக்கமுடியாது.

அழைப்புக்கள் யாவும் தனிப்பட்ட ரீதியிலே அனுப்பப்பட்டதாகஅறிகின்றேன். ஆனால் பல எழுத்தாளர்களும், கலைஞர்களும் மேற்படி விழாவில் இல்லை என நண்பர் ஒருவர் கவலைப்பட்டார்.

பல விசாரிப்புகளுக்குப் பின்னர் பலருக்கு அழைப்புக் கிடைக்கவில்லை என அறியமுடிந்தது. இப்போதுள்ள சந்தேகம் அனுப்பப்பட்ட அழைப்புக்கள் என்ன ரீதியில் அனுப்பப்பட்டன? குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் தானா?

மதிப்பிற்குரிய சோமகாந்தன் அவர்கள்தான் இதற்குப்பதில் சொல்லவேண்டும். ●

□□□

முனைப்பு

□
□
□

என் உயிரின் நரம்புகள்
அறுந்தன
அந்தரித்தன.
வாழ்வின் பனிமலர்ச் சாகரங்கள்
ஒரு சுமையாய்.

சூரிய முகம் துடைத்த பொழுதுடன்
வியர்வையாய்க் கரைந்தார்
வாழ்விற்கரய் மனிதர்

புழுதிமண்ணில் கால்கள் புதைத்து
காடும் புதரும் மண்டிய
நம் கிராமத்துப் பசுமைகளில்
உழைப்பினைச் சுமக்கிறார் மக்கள்

மின்னல் பிளந்து பூமியை உதைத்தது போல
வயிற்றினுள்ளே
கோர நகங்களால் பிறாண்டுவது யார்?

பசியின் கொடுமை
வறுமையின் தோள்களில்
தோழமையுடன்
குடிசையும் குப்பி விளக்கும் உரிமை சொல்லும்
விழிகளில் ஈரம் ஊற்றெடுத்து
மனதின் துயராய் அழும்

இலைகளை உதிர்த்து
முள்பரப்பி நிற்கிறது
வாழ்வின் பொருள் மறைக்கும்
கொடுந்துயரம்,

எனினும்
வேர் விட்டுத் தளிர்க்கிறது
கூம்பின் வடிவமாய்
நம்பிக்கையின் இரு தளிர்கள்.

[] எஸ். கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கட் உலகின் கிரஞ்சீவி நாயகன் டொனால்ட் பிரட்மேன்

சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மிகச் சிறந்த துடுப்பாட்டக்காரராக யாரைக் கூறலாம்? என வினவினால் கிரிக்கெட்டை மிகச் சொற்ப மாவது அறிந்த எவரும் சற்றும் தாமதியாது கூறுகின்ற விடை சேர். டொனால்ட் பிரட்மன்(Sir Donald Bradman) என்பதாகும். அந்தளவிற்கு எவராலும் தகர்க்கப்படவியலாத சாதனைகளை ஏற்படுத்திய துடுப்பாட்டக்காரராக விளங்கினார் இந்த அவுஸ்திரேலியர்.

பிரட்மனின் சாதனைத் திறனை Ray Robinson என்ற அவுஸ்திரேலிய கிரிக்கெட் விமர்சகர் பின்வருமாறு மிகப் பொருத்தமாகத் தம்நூலொன்றில் குறிப்பிடுகிறார்.

"His position at The Top of The batting averages was as changeless as The alphabet"

(பிரட்மனின் துடுப்பாட்டச் சராசரி அகர வரிசை போன்று நிலையானது)

இவரது துடுப்பாட்ட சராசரி ரெஸ்ட் போட்டிகளில் எவ்வளவு தெரியுமா? 99.94

பிரட்மன் தான் ஆடிய 52 ரெஸ்ட் போட்டிகளில் (80 இன்னிங்ஸ்) மொத்தம்6996 ஓட்டங்களைக் குவித்தார்.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் இவர் தான்ஆடிய ஒவ்வொரு ரெஸ்ட் போட்டிகளிலும் சராசரியாக 134 . 53 ஓட்டங்களைப் பெற்றார்.

1908ம் ஆண்டில் பிறந்து இன்றும் 81வயது குடுகுடு கிழவராக வாழ்ந்து வரும் இச் சாதனையாளர் கிரிக்கெட் வரலாற்று ஏடுகளில் தன் நாமத்தை நிரந்தரமாகவேபதித்துக்கொண்டார்.

இவர் பெற்ற 29செஞ்சரிகளில் 10 இரட்டைச் செஞ்சரிகளும் இரண்டு முச்செஞ்சரிகளும்(Trible Century) அடங்கும். இவருக்கு செஞ்சரி அடிப்பது ''அல்வா'' சாப்பிடுவது மாதிரி. தென்னாபிரிக்காவிற்கெதிராக 1931 – 32ல் ஆடிய ஒரு டெஸ்டில் இவர் ஆட்டமிழக்காது 299 ஓட்டங்களைப் (அடிலெய்டில்) பெற்றார். (தென்னாபிரிக்கா அப்போது ரெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றி வந்தது)

இவரின் 29 செஞ்சரிகள் என்ற சாதனையைத்தான் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் பின்னர் முறியடித்தார். டெல்கியில் மேற்கிந்திய அணிக்கெதிராக 1983ல் தனது 29 வது செஞ்சரியைப் பெற்று பிரட்மனின் சாதனையை ஈடு செய்த போது செய்தியாளர்களிடம் சுனில் கவாஸ்கர் பின்

-வை. சிவநேசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமாறு அடக்கத்துடன் கூறினார். ''நான் செய்திருப்பது ஒரு சாதனைதான் என்றாலும் அது ஒரு 'றெக்கோர்ட்'' (record) ஆகாது. ஏனென்றால் பிரட்மன் 52 ரெஸ்டில் றெக்கோட்டை ஏற்படுத்தினார். எனக்கு இதனைச் செய்ய 95 ரெஸ்ட்கள் தேவைப்பட்டன. பிரட்மன் 95 ரெஸ்டுகளில் ஆடியிருந்தால் குறைந்தது 75 செஞ்சரிகளாவது பெற்றிருப்பார்''

கவாஸ்கர் கூறியது முற்றிலும் உண்மைதான் எனினும் பிரட்மன் காலத்தில் இன்றுள்ளது போன்று அதிவேகப் பந்து வீச்சாளர்கள் கிடையாது. தற்காலத்தைப் போன்று அதிக போட்டிகளும் இடம் பெறுவதில்லை.

பிரட்மன் 52 ரெஸ்டுகளே ஆடினாலும் சுமார் 20 ஆண்டுகள் ஆடினாரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பிரட்மனின் ஒட்டங்களில் கணிசமானவை இங்கிலாந்து அணிக்கெதிராகப் பெறப்பட்டவை ஆகும். இவரின் 29 செஞ்சரிகளில் 19 இங்கிலாந்திற் கெதிரானவை, 2 மேற்கு இந்திய அணிக்கெதிரானவை, 4 இந்திய அணிக்கெதிராகப் பெறப்பட்டவை.

பிரட்மன் ஐந்து ரெஸ்டுகள் கொண்ட தொடர் ஒன்றில் மொத்தம் 974 ஒட்டங்களைப் டெற்றாரென்றால் நம்புவீர்களா? (சராசரி 139 . 14) இத் தொடரில் எல்லாமாக 4 செஞ்சரிகளைப் பெற்றார். இவற்றில் பிரட்மனின் அதி கூடிய ஒட்டங்களான 334ம் அடங்கும். லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ரெஸ்டில் இத் தொகை பெறப்பட்டது. இவ் லீட்ஸ் ரெஸ்டில் இவர் புரிந்த சாதனை அபாரமானது. ஏனெனில் ஒரு நாளில் இவர் 300 ஒட்டங்களைப் பெற்றார். இதில் 46 பவுண்றிகள் விளாசித் தள்ளப்பட்டன. உலக ரெஸ்ட் சரித்திரத்தில் ஒரே நாளில் 300ற்கு மேல் ஒட்டங்களைப் பெற்றவர் இவர் ஒருவரே.

இடைவேளைக்கு முன்பே நூறு ஒட்டங்கள் பெறப்பட்டன. 214 நிமிடங்களில் 200 ஒட்டங்கள் பெறப்பட்டன.

(இதுவும் ஒரு சாதனை)

இன்று நாள் முழுக்க மட்டை பிடித்து ஐம்பது ஒட்டங்களைப் பெறும் வீரர்களுடன் பிரட்மனை எப்படி ஒப்பிடுவது?

சில ஆண்டுகளின் பின்னர் சேர் லியோனார்ட்ஹட்டன் (Leu Hatton) என்ற வீரர் முந்நூறுக்கு மேல் ஒட்டங்களைப் பெற்ற போது விமர்சகர்கள் அவரிடம் ''நீங்கள் 800 நிமிடங்களில் இவ்வளவு ஒட்டங்களைப் பெற்றீர்கள். ஆனால் பிரட்மன் 375நிமிடங்களில் அல்லவா 334 ஒட்டங்களைப் பெற்றார்'' என கேள்விக்கணை தொடுத்தனர்.

பன்னிரண்டு ஆண்டுகள் அவுஸ்திரேலிய அணியின் தலைவராகவிருத்த டொன் பிரட்மன் ஒரு டெஸ்ட் தொடரிலும் தோல்வியுறவில்லை.

அந்நாட்களில் பிரட்மன் செஞ்சரி பெற்றது. ஒரு செய்தியாக இருக்கவில்லை. அவர் அவுட்டானதையே பத்திரிகைகள் தலைப்புச் செய்திகளாக வெளியிட்டன.

> இருட்டைக் கண்டு குழந்தை பயப்படுகிறது. அதை நாம் மன்னித்து விடலாம். ஆனால் வெளிச்சத்தைக் கண்டு பயப்படும் மனிதர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களை எப்படி மன்னிப்பது.
>
> -பிளேட்டோ-

இதில் மிக ஆச்சரியப்படத்தக்க விடயம் யாதெனில் பிரட்மன் தன் இறுதி டெஸ்டில் ஆடிய ஒரே இன்னிங்ஸில் ஒட்டமெதுவும் பெறாமலேஆட்டமிழந்தார் என்பது தான். இங்கிலாந்திற் கெதிராக 1948 ம் ஆண்டில் லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த இப் போட்டியில் பிரட்மன் ERICK HOLLIEL என்பவரின் பந்து வீச்சில் தான் சந்தித்த இரண்டாவது பந்திலேயே விக்கட்டை இழந்தார். அன்று அப் பந்து வீச்சாளரின் மன நிலை எப்படி இருந்திருக்குமென எண்ணுகிறீர்கள்?

முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் 117 செஞ்சரிகளை பெற்ற பிரட்மன் ஒரு முறை முதல்தர போட்டி ஒன்றில் - நம்பினால் நம்புங்கள் 24 பந்து வீச்சுகளில் ஒரு செஞ்சரி பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

நியூமார்க்கட் எழுச்சி பெற்றிருந்தது. கடைகளும் வண்ணம் வண்ணமாய் முகம் மலர்ந்திருக்க இரை தேடும் பறவைகள் போல ஆண்களும் பெண்களும் கடைகளில் தேடிக் கொண்டிருந்தார்கள்.

இளவெய்யில் மறைந்து வெய்யில் உடலை வாட்டத் தொடங்கியிருந்தது. கடைகளின் முன்புறம் மினிபஸ்களும் சைக்கிள்களும் இடம் பிடித்திருந்தன. இடையில் நடைபாதை வியாபாரிகள், அவர்களின் வியாபாரப் பொருட்கள்.

ஞானரூபன் படியேறிய போது முதலாளி பரமசிவம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். வழக்கமான இடத்தில் கல்யாணி. அவனைப் பார்த்ததும் முகத்திலே எந்த விதமான உணர்வையுமே காட்டாமல் நின்றாள். காயத்திரியைக் காணவில்லை.

''இப்ப நேரம் என்ன?'' என்ற முதலாளியின் கேள்வியில் சூடு இருந்தது.

''ஒன்பதே கால்'' என்றான் ஞானரூபன்.

''எத்தினை மணிக்கு வேலைக்கு வர வேணும் எண்டு தெரியாதே. எதுக்கும் ஒரு ஒழுங்கு முறை இருக்கு. நீ ஆடி ஆடி ஒன்பது மணிக்கு வா. அவ ஒருத்தியை இன்னும் காணேல்லை. வியாபார நேரத்திலே நான் இஞ்சை இருந்து வாற ஆட்களோடை மல்லுக் கட்டுறன்''

ஞானரூபன் பதில் சொல்லாமல் நின்றான். கல்யாணி தலையைக் குனிந்து கொண்டாள்

''ஏன்நேரஞ் செண்டது''

அவன் திரும்பி ரோட்டைப் பார்த்தான். றோட்டின் நடுவே இருந்த நடைபாதைக் கடை ஒன்றில் இருந்து இரண்டு பேர் பெரிதாகச் சத்தம் போட்டுக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். நகரத்தின் அத்தனை சத்தங்களையும் மீறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பேச்சுச் சத்தம் கேட்டது.

முதலாளியின் கேள்விக்குப் பதில் சொல்லாததால் அவருக்கு கோபம்வந்திருக்க வேண்டும்.

''நான் கேட்டது காதிலை விழேல்லையே. ஏன் நேரஞ் செண்டது. வேலை எண்டால் ஒரு பொறுப்பு இருக்க வேணும். அக்கறைவேணும்''

ஞானரூபனுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியவில்லை. சட்டென்று என்ன பதிலைச் சொல்வது?

''எங்கடை பக்கம் சின்னப் பிரச்சினை. அது தான் காலமை மறிச்சு வைச்சவை. இப்பதான் விட்டாங்கள்'' என்றான்.

சட்டென்று இப்படியான டிப் எப்படி அடிக்க முடிந்தது என்பதை நினைத்து அவனுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது.

முதலாளியின் முகத்தில் இருந்ததிவிரம் மறைந்தது. சில்லறை வேலைகளுக்காக இருக்கும் சிறுவனான கணேசன் தலையில் சுமையுடன் உள்ளே வந்தான். அது ஒரு பெரிய கார்ட் போட் பெட்டி.

ஞான ரூபன் கணேசனுடன் சேர்ந்து பெட்டியை இறக்கினான்.

''உதிலை இறக்கிறதை அந்த ஸோக்கேசிலஅடுக்கு'' என்றார் முதலாளி.

ஞானரூபன் செயல்பட ஆரம்பிக்க கல்யாணியும் துணைக்கு வந்தாள். காயத்திரி இல்லாததன்வெறுமையை அப்போது தான் ஞானரூபன் உணர்ந்தான்.

''காயத்திரியை ஏன் காணேல்லை'' என்று கல்யாணியைக் கேட்டான் ஞானரூபன்.

'அந்தப் பக்கத்திலை இருந்தும் பஸ் ஒண்டும் வரேல்லை. ஏதேனும் பிரச்சனையோ தெரியாது. இராத்திரி அந்தப் பக்கம் சத்தமும் கேட்டது'' என்றாள் கல்யாணி.

என்னவோ ஒன்றை இழந்தது போன்ற உணர்வு காயத்திரி இல்லாததன் காரணத்தால் எழுந்திருக்க வேண்டும். அவள் இருந்தால் ஏதோ ஒரு பிரகாசம் பரவியது போல இருக்கும்.

பெட்டியில் இருந்த பௌடர் ரின்களை அடுக்கும் போது அதன் இனிய வாசம் மூக்கைத் துளைத்தது. இரண்டு இளம் பெண்கள் உள்ளே நுழைந்தார்கள்.

''ரெட் கலர் லேஸ் இருக்கா'' என்றாள்ஒருத்தி. கல்யாணி அவர்களை நோக்கி நகர்ந்தாள்.

ஞானரூபனுக்கு மீண்டும் காயத்திரியின் நினைவே வந்தது. முதன் முதலாக ஒரு மாதத்திற்கு முன் இந்த பான்சிக் கடைக்கு வேலைக்கு வந்த போது முதலாளி பரமசிவம் கடையில் இருக்கவில்லை. கணேசனோ இராமநாதரோ கூட இல்லை.

இதே போலத்தான் ஒன்பதுமணிநேரக் காலைப் பொழுது. சோக்கேசில் இருந்த பொருட்கள் ஒரு விதமான கனவு உலகுபிரம்மையை ஏற்படுத்தியிருந்தன.

ஞானரூபன் தயங்கித் தயங்கி கடை வாசலில் நின்றான்.

''என்ன தம்பி வேணும்'' என்று காயத்திரி கேட்டாள்.

அவனுக்கு உடனடியாக பதில் சொல்ல முடியவில்லை. அவனது மௌனம் காயத்திரிக்குச் சிரிப்பை உண்டாக்கியிருக்க வேண்டும். அவள் கல்யாணியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு

''என்ன வேணும் எண்டு சொல்லும் தம்பி'' என்றாள் மீண்டும்.

''முதலாளி நிற்கிறாரோ''

''இல்லை ஏன்'' எனக் கேட்ட காயத்திரியின் விழிகளில் மின்னிய ஜொலிப்பு ஞானரூபனை வெகுவாகத் தாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை இண்டைக்கு வரச் சொன்னவர்''

''என்னத்திற்கு''

''வேலைக்கு'' என்றான் ஞானரூபன்.

காயத்திரியின் விழிகள் வியப்பால் மலர்ந்தன.

''நீரே புதிசாய் வேலைக்கு வாற ஆள்'' எனக் கேட்டாள் ஆர்வத்துடன்.

''ஓம்''

''மூதலாளி இன்னும் ஒரு மணித்தியாலத்தில் வந்திடுவார். பாங்கிற்குப் போட்டார்'' என்ற குரலில் ஆதரவுதொனித்தது.

அவள் முகம் மலரச் சிரித்தாள். கன்னங்களில் மெல்லியதாகக் குழி விழுந்து மறைந்தது. விழிகளில் பிரகாசம் கொப்பளித்தது. ஞானரூபனுக்கு இனம் தெரியாத விபரிக்க முடியாத ஒரு வகை மகிழ்ச்சி உண்டானது.

ஏற்கனவே மூன்று இடங்களில் இரண்டு வருடங்களைக் கடத்திய போதும் இவ்விதமான அனுபவம் ஏற்பட்டதில்லை.

''முந்தி எங்கை வேலை செய்தனீர்''

''சுந்தரலிங்கம் பார்ட்ஸ் கடையில்''

''அதை விட்டுக் கனநாளே'' அடுத்த கேள்வி காயத்திரியிடம் இருந்து பிறந்தது. எது விதமான சலனமும் இல்லாமல் இயல்பாக அவள் கதைக்கத் தொடங்கினாள்.

கல்யாணி இந்த உரையாடலில் எதுவித சம்பந்தமும் இல்லாதவள் போல இருந்தாள். ஞானரூபனுக்கும் இவ்வளவு நேரமும் இருந்த பதட்டம் சற்றுத் தணிந்திருந்தது.

''மூன்று கிழமை இருக்கும்''

''ஏன் அந்த வேலையை விட்டனீர்.''

ஞானரூபன் சிறிது நேரம் பதில் கூறாமல் நிற்க காயத்திரி சிரித்தாள்.

''முதலாளியோடை பிரச்சனையோ''

''அந்தாள் எந்த நேரமும் பாய்ஞ்ச படிதான். மரியாதையாய் கதைக்கத் தெரியாது. ஆக்களுக்கு முன்னால பேசும்'' என்றான் ஞானரூபன்.

காயத்திரி மீண்டும் சிரித்தாள்.

''உதுகளை எல்லாம் எதிர்பார்த்தால் எங்களைப் போல ஆட்கள் இப்படியான பிறை வேற் செக்டரில வேலை செய்யேலாது. அப்படி எண்டால் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வேலை தேடவேணும். எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கேக்க அதெல்லாம் சுகமான அலுவலே. வீட்டுக்கு வீடு வாசற்படி மாதிரி எல்லா இடமும் இப்படித்தான்'' என்ற காயத்திரி தொடர்ந்து சிரித்துக் கொண்டு சொன்னாள்.

''உப்பிடி எண்டால் நீர் இஞ்சை தன்னும் சனகாலத்திற்கு நிண்டு பிடிக்க மாட்டீர்''

ஞானரூபனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

''நீங்கள் ஆம்பிளையள் கோவிச்ச உடனை வேலையை விட்டுப் போட்டுப் போகலாம்.புது வேலைதேடலாம். ஆனால் எங்களைப் போல பொம்பிளையள் என்னசெய்யலாம்.நாங்கள் இப்பசிரிச்சுக் கொண்டு தான் நிற்கிறம். ஆனால் எங்கடை மனங்களில இருக்கிற வேதனை எங்களுக்குத்தான் தெரியும். நாங்கள் சந்தோஷமாய் இஞ்சை வேலை செய்யேல்லை, வெளிநாட்டுக்குப் போகாமல் இந்த மண்ணில இருந்து கொண்டு வாழும் மக்கள் கூட்டம் போலத்தான் நாங்களும் இஞ்சை வேலைசெய்யிறம்'' என்ற காயத்திரியின்குரலில் இழையோடி இருந்த வேதனையின் வீரியத்தை ஞானரூபனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் முகம் சிவந்திருந்தது. அவன் அவள் முகத்தினையே விடாமல் பார்வையால் அளந்தான். பரிபூரணமான செளந்தரியம் நிறைந்த அதன் பின்னணியில் மறைந்து போய் இருக்கும் வேதனைச் சுவடுகளின் ஆழம் தான் என்ன?

''எவ்வளவு படிச்சனீர்'' எனக்காயத்திரி கேட்டாள்.

''அட்வான்ஸ் லெவல்''

''எத்தனை பாடங்கள்''

''வன் சி-வன் எஸ்''

''மட்ஸ்சோ - பயோவோ''

''மட்ஸ். ஒருக்காத்தான் எடுத்தனான் பிறகு எடுக்கேல்லை''

''ஏன்''

''எடுத்து என்ன பிரயோசனம். எந்த வளத்தால எங்களைப் போல ஆட்களுக்கு பிரயோசனம் இருக்கு. மேலைதான் படிக்க வசதியிருக்கா, படிச்சால் தான் வேலை இருக்கா. படிச்சுப் போட்டு வேலையில்லாமல் இருக்கிறதைவிட இப்படியே திரிஞ்சால் நல்லது தானே. இருக்கிறது கொஞ்சக்காலம் அதுவரைக்கும் இப்படியே திரிவம்.''

வெறுப்பும் விரக்தியும் வெளிப்பட ஞானரூபன் சொன்னதை காயத்திரி கேட்டாள்.

ரீடம்ளர்களுடன் கணேசன் அப்போது உள்ளே நுழைந்தான்.

''இதை வைச்சிட்டு இன்னுமொரு ரீவாங்கிக் கொண்டுவா கணேசா'' என அவனைத் திருப்பி அனுப்பினாள் காயத்திரி.

கணேசன் ஞானரூபனைப் புதினமாகப் பார்த்துக் கொண்டுதிரும்பப்போனான் காயத்திரி ஒரு டம்ளரை எடுத்து ஞானரூபனிடம் நீட்டினாள்.

''நீங்கள்குடியுங்கோவன்' என்று மறுத்தான் அவன்.

''இது எல்லாருக்கும் தான் வாறது. நீரும் இனி இஞ்சை தானே வேலை செய்யப் போறீர் குடியும்'' என்றாள் கரிசனையுடன். ஞானரூபன் ரீயை வாங்கிக் கொண்டான்.

இப்படித்தான் அவர்களின் அறிமுகம் ஆரம்பமாயிருந்து வளர்ச்சியும் கண்டது.

யாழ்ப்பாணத்தில் அவன் பலவிதமான இளம் பெண்களைக் கண்டிருக்கின்றான். அவனோடு படித்தவர்கள், தெரிந்தவர்கள் என்று. விதம்விதமான ஆடைகளுடன் புதிதுபுதிதாக முளைத்தெழும் பாஷன்களை அங்கீகாரம் செய்து கொண்டு திரியும் பெண்களையும் பார்த்திருக்கின்றான். பொழுது போவதற்காகவே வெளிக்கிட்டுத்திரிபவர்கள். இருக்கும் உடைகளை அணிவதற்காக புறப்பட்டு விட்டவர்கள். கையில் இருக்கும் காசை எப்படியாவது செலவழித்தே தீரவேண்டும் என்ற எண்ணத்தில் பஸ் எடுப்பவர்கள் என்று எத்தனை ரகம்.

வேலைக்கு வருபவர்களில் கூட அனேகம் பேர் பொழுதினைப் போக்காட்டத்தான் வருகின்றார்கள் தாங்கள் எடுக்கும் சம்பளத்தினை வீட்டுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயம் இல்லாதவர்கள், தங்கள் மேக்கப் செலவுகளை, ஆடைகளை, தெண்டிந்திய சினிமாச் சரக்குகள் நிறைந்த சஞ்சிகைகளை வாங்குவதில் கரைத்துக் கொள்ளுபவர்கள்.

ஆனால் எத்தனை பெண்கள் தங்கள் குடினிகளில் நெருப்பு எரிவதற்காக வேலைக்குவருகின்றார்கள். வயது போன பெண்கள் நெருப்புடன் வீட்டில் அமுங்கிக் கொண்டு இருக்க மற்றப் பெண்கள் கொஞ்சச்சம்பளங்களுக்காக தனியார் தொழில் நிறுவனங்களில் நொறுங்கிக் கொண்டு உள்ளனர்.

குடிப்பதையே சுதந்திரமான மனிதனின் கடமையாக எண்ணும் தகப்பனார் மதியாபாரணம், வெளி உலகம் தெரியாமல் அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி விடுவாள் என நம்பிக் கொண்டுஇருக்கும் அம்மா'' வாழ்க்கை என்பது விபரம் தெரியாத குழந்தைப் பிள்ளைப் பருவம் வரைதான் இனிமையானது. பின்னர் அது வசதி படைத்தோருக்கு மட்டுமே என்று நம்பும் ஐந்து பெண்கள் கொண்ட அந்தக் குடும்பத்தில் காயத்திரி இரண்டாவது பெண்.

''என்ரை வயது உனக்குத்தெரியுமா ஞானரூபன்'' என ஒரு தடவை அவள் கேட்டபோது திக்குமுக்காடிப் போனான் அவன்.

சதாகாலமும் மலர்களாகவே பூத்துச் சொரியும் பூஞ்செடியைப் பார்த்து வயதைக் கேட்பதென்றால்.

காயத்திரி சிரித்தாள்.

''போன மாசி மாசத்தோடை எனக்கு இருபத்தியெட்டு வயது முடிஞ்சிட்டுது'' என்றாள் அவள்.

தன்னைவிட ஐந்து வயது மூத்தவள் என்பதை ஞானரூபனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஐந்து பெண்களில் மூத்த பெண் வீட்டில் தாய்க்கு குசினியிலும், குடித்துவிட்டு வந்து தகப்பன்சத்தியெடுக்க அதனைத் துப்பரவாக்கவும் துணையாக இருக்கின்றாள்.

காயத்திரிக்கு அடுத்தவள் கமலா. உள்ளூரிலேயே ரொபிக் கொம்பனிக்கு வேலைக்குப் போகின்றாள். சமலாவுக்கு அடுத்த கற் பகத்திற்கு ஒருகால் ஊனம். நடப்பதே சிரமம். எல்லோருக்கும் சுமையாக இருக்கின்றேனே என்ற கவலை வேறு அவளுக்கு. கடைசிப் பெண் ரோகினி மாத்திரம் படித்துக் கொண்டு இருக்கின்றாள்.

''இருந்த தோட்டக் காணிகள் எல்லாம் வித்துக் குடிச்சிட்டார் ஐயா. இப்ப மிஞ்சியது வீடும் வளவும்தான். அதுகூட ஈடுதான். மிச்சமாய் இருக்கிறது வறுமையும் எங்கடை வயதுகளும்தான்'' என்று காயத்திரி சொல்லியிருந்தாள்.

''யாழ்ப்பாணத்தில் இருக்கிற எத்தனையோ குடும்பங்கள் என்னென்ன மாதிரியெல்லாம் முன்னேறி விட்டுதுகள் எண்டெல்லாம் ஆட்கள் சேர்ந்து கதைப்பினம். ஒவ்வொரு வீட்டுக்கு ஒண்டோ இரண்டு பேர் வெளிநாடுகளுக்குப் போய் உழைச்சு அனுப்புறாங்கள். பிறகென்ன பிரச்சனை எண்டெல்லாம் கதைக்கிற ஆட்கள் யாழ்ப்பாணத்தின்ரை ஒரு பகுதியைத்தான் பார்க்கினம். எங்களைப்போல கஸ்டப்படுகிற எத்தனையோ குடும்பங்கள் இஞ்சைதான் இருக்கினம் எண்டதை அவை மறந்து போகினம்.'' என அவள் சொன்னபோது விழிகளில் ஈரம் பளபளத்தது.

நேரம் காலை பத்துமணியான பின்னரும் காயத்திரி வரவில்லை. வியாபாரம் சூடு பிடித்த நிலையில் காயத்திரி இல்லாத தன் தாக்கத்தினை உணர முடிந்தது. ''இந்த பட்டின் என்ன விலை? பிங்கலர் நெயில் பொலிஸ் இருக்கா?'' என்ற எல்லாக் கேள்விகளுக்கும் டக்டக் என்று பதில் சொல்லக் கூடியவள் அவள் தான்.

மூன்றுவருடங்களாக இந்தக் கடையில் தொடர்ந்து இருக்கின்ற படியால் வியாபாரத்தில் நெளிவு, சுழிவு களையெல்லாம் அட்டகாசமாக அறிந்து வைத்திருக்கின்றாள்.

மத்தியானம் ஒரு மணிக்கு சாப்பாட்டுக்கு முதலாளி புறப்பட்டு விட்டார். வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு அவர் மூன்று மணிக்குத்தான் வருவார்.

அவர் திரும்பி வரும்வரை காயத்திரிதான் பொறுப்பு. அந்த நேரங்களில்தான் மூன்றுபேரும் கதைக்கவசதியுண்டு. முதலாளி நிற்கும் போது ஆளை ஆள் பார்க்கலாமே தவிர கதைக்க முடியாது.

முதலாளி புறப்பட்ட கையுடன் ஞானரூபனும் வெளிக்கிட்டான். வழக்கமாகச் சாப்பிடும் கடையில் தவலிங்கம் சாப்பிட்டுவிட்டு சிகரெட்டுடன் இருந்தான்.

''ஏண்டா லேட்'' எனக் கேட்டான் தவலிங்கம்.

''மூனா இப்பதான் போனார். அதோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் கடையில் சன முமாய்ப் போச்சு'' என்றான்.

கடைப் பெடியன் இலை போட்டு இடியப்பம் வைத்தான்.

''ஏன் சோறு சாப்பிடேல்லையோ'' எனத் தவலிங்கம் கேட்டான்.

''இல்லை, பின்னேரம் வீட்டை போய்ச் சாப்பிடுவம்''

''வீட்டில சோறு வைச்சிருப்பினமே''

''அம்மா ஒவ்வொரு நாளும் வைச்சிருக்கிறவதானே, நான் தான் அதைப் பற்றி அக்கறைப்படுறேல்லை''

''நீ ஒரு சரியான விசித்திரமான பிறவியெடப்பா''

''நீ சொல்லுறது உண்மை தான் மச்சான். சில வேளை தனிய இருந்து யோசிச்சுப் பாக்க எல்லாம் வித்தியாசமாய்த்தான் இருக்கு. ஆனால் என்ன செய்யிறது.

என்னால ஆரோடையும் ஒத்துப் போகேலாமல் இருக்கு. எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக இருக்கத்தான் மனம் அந்தரப்படுகுது. எந்தநேரமும்சந்தோஷமாக இருக்க வேணும். நினைச்சபடி எந்தக் குறுக்கீடும் இல்லாமல் வாழவேணும். இதுதான் என்ரை மனதில இருக்கு.'' என்றான் ஞானரூபன்.

''நேற்று நான் எட்டு மணிக்குப் போக வீட்டாக்கள் பெரிய அமளிப்பட்டுக் கொண்டு நிண்டினம்.''

''நான் போகேக்க றோட்டில் ஒரு சனம் இல்லை. இப்ப ஆறு மணிக்கே ஊர் அடங்கிப் போகேக்க நாங்கள் எட்டுமணிக்குப் போனால் எப்படிஇருக்கும். நான் போகேக்க வீட்டில எல்லோரும் வெளி விறாந்தையில்தான் இருந்தினம். ஒருத்தர் ஒரு கதையில்லை. வீட்டுப்படியேற எனக்குச் சத்தி வந்திட்டுது. ஒவெண்டு எடுத்ததால் உடுப்பெல்லாம் சத்தி. போட்ட சேட், லோங்ஸ் எல்லாம் சரி'' என்றான் ஞானரூபன்.

(தொடரும்)

உள்ளம் உவகையுற
உள்ளம் வெளிவரட்டும்...

கட்டிடப் பொருட்கள் - பெயின்ற் வகைகள்
S-LON பைப்வகைகள், இணைப்புகள்,
மின்சார உபகரணங்கள், விவசாய கிருமிநாசினிகள்
விதைகள், உபகரணங்கள் அனைத்திற்கும்

ஸ்ரீ அபிராமி
பலாலி வீதி
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வழமைபோல் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள் படிக்கும் புத்தகங்கள் தோள்களிலும், முதுகுகளிலும், கைகளிலும் அவர்கள் படிப்பினைப்போல் ஊசலாடிக் கொண்டிருந்தன. வாய்கள் சும்மா இருக்காமல் எதையோ அசை போட்டுக் கொண்டிருக்க கால்கள் றோட்டுப் புழுதியை அளைந்து கொண்டிருந்தன. இவர்கள் இப்படிப் புழுதியை அளைந்து கொண்டு கும்பலாக வந்ததை ஒரு வயோதிபர் கண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தவர், பின் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார். ஆனால் அவர்களில் ஒருவன் இப்படிக் கும்பலாக வருதல் பிழையென நினைத்து, அதட்டினான்.

''எல்லோரும் கும்பலாக வராமல் ஒழுங்கா வாங்கடா''

அவனது அதட்டலைத் தொடர்ந்து மற்றவர்கள் ஒழுங்காக நடக்க ஆரம்பித்தார்கள். இப்படி அவர்கள் நடந்து கொண்டிருந்தாலும் சுவர்களில் ஒட்டியிருந்த எல்லா விதமான போஸ்டர்களையும் வாசித்து, அதில் இருந்த தமக்குப் பிடித்தமான வசனங்களைச் சொல்லிச் சிரித்தார்கள்.

''எங்கள் விலங்குகளை உடைத்தெறிவோம்''

''அடக்குமுறையை ஒழிப்போம்''

அவர்களுக்குச் சில மாதங்களாக இதுதான் பொழுது போக்கு ஆகிவிட்டது. பள்ளிக்கூடம் போவார்கள், பள்ளிக்கூடம் கேற் பூட்டப்பட்டிருக்கும். கேற்றுக்கு வெளியே கும்பலாக ஆட்கள் நிற்பார்கள். பிறகென்ன, இவர்கள் வீடு திரும்பி வந்து விடுவார்கள். சில வேளைகளில் பள்ளிக்கூடம் திறந்திருக்கும். ஆசிரியர்கள், பிள்ளைகள் உட்பட எல்லோரும் வெளியில் நிற்பார்கள். சிறிதுநேரம் சென்றதும் எல்லோரும் வீடு திரும்புவார்கள். இப்படித் தொடர்ந்து பள்ளிக்கூடம் போய் வந்து அலைந்ததினால் அவர்களின் படிப்பு எங்கேயோ போய் நின்றது.

வெயில் நன்றாக அவர்களை வாட்டியது. அதனால் ஒருவனுக்குத் தாகமெடுத்தது.

''சரியாய் தண்ணிவிடாய்க்குது. என்னட்டரெண்டு ரூபாய் இருக்கு. மிச்சக்காசை நீங்கள் போடுங்கோ. ஒருசோடா வேண்டிக் குடிப்பம்''.

அவனது கோரிக்கையை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஏனெனில் அவர்களும் தாகத்தில் இருந்தார்கள். வழியில் வந்த கடையில் சோடா வேண்டப் போனவர்கள் அப்படியே அசைவற்று நின்றனர்.

சி. கதீர்காமநாதன்

கட்டுகள்

''டேய் தேத்தண்ணிக் கடையெல்லே இப்ப மினிசினிமா ஆக்கிப் போட்டாங்கள்.''

அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டு ஆச்சரியத்துடன் அவர்கள் மேலே தொங்கிக் கொண்டிருந்த கலர் போஸ்டரைப் பார்த்தார்கள்.

''இதடா பழைய படம் நான் முந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில டெக்கில பார்த்தனான். சரியான சண்டைப் படம்''

ஒருவன் அவர்களைப் பார்த்து தான் பார்த்ததைப் பற்றி புழுகத் தொடங்க அவர்கள் சோடா நினைவை மறந்தார்கள் இடையில் ஒருவன் வெளிச் சுவரில் ஒட்டியிருந்த பெண்ணின் படத்தைக் காட்டி ஏதோ சொல்ல அவர்கள் கொல்லெனச் சிரித்தார்கள். இப்படியே சிரிப்பும் அமளியுமாக தாங்கள் வழமையாகக் கொட்டமடிக்கும் தேநீர் கடையிருக்கும் சந்திக்கு வந்துசேர்ந்தார்கள். சந்தியில் சன நடமாட்டம் குறைந்திருந்தது தேநீர்க் கடை பூட்டுவதற்கான இறுதி நிலையில் இருந்தது. கடைக்கு வெளியில் சிலர் வட்டமாகக் குந்தியிருந்தபடிபலமாகஉரத்துக் கதைத்து எதையோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படிவிவாதித்துக் கதைக்கும் போது ஏற்பட்ட அபிநயங்களைப் பார்த்து இவர்கள் சிரித்தார்கள்'

''ஒவ்வொரு நாளும் பின்னேரத்திலை இதுதான் இவைக்கு வேலை''

''கனக்க கதைப்பினம்''

கையில் பேப்பர் வைச்சிருந்தவர் திடீரென பெரிதாகக் கூச்சலிட்டார்.

''கட்டாயம் ரசியக்காரன்அப்படி சும்மா பாத்துக் கொண்டிருக்கமாட்டான்''

''சரி ரசியக்காரன் உதவினால் மற்றைய நாடுகள் சும்மா பார்த்துக் கொண்டு இருக்குமோ?''

அவர்கள் இப்படியே தொடர்ந்து மரத்தின் அடிவேரைக் கண்டுபிடித்து பழையபடி மேலே வர, ஒருவர் எழும்பி சாரத்தினை உதறிக் கட்டினார். அதனைத் தொடர்ந்து கூட்டம் இனிது முடிந்தது.

''சரியடா முடிஞ்சு போச்சு. நீங்கள் எங்கட அலுவலை மறந்து போனியளே.''

''இல்லையடா. மறக்கேல்ல''

அவர்கள் அத்துடன் பேச்சை நிறுத்தி, எதையோ காணாமல் தேடுபவர்கள் போல் தேடி விழிகளை நாலாபுறமும் ஓடவிட்டார்கள்.

''என்னடா ஆளைக் காணேல்லைப் போலகிடக்கு''

''இல்லையடா இங்கதான் எங்கையும் நிற்பார்''

''காலமையும் எங்கள கண்டிட்டு என்ன மாதிரி பாஞ்சு வந்தது''

''வடிவாய்பாருங்கோடா. எங்கயும் சாப்பிட்டு போட்டு படுத்துக்கிடப்பார்''

அவர்கள் கேள்வி பதில்களை முடித்துச் செயலில் இறங்கினர். கடைசியில் ஒருவன் கண்டுவிட்டான்.

''அங்கை பாருங்கோ. அந்த குப்பைக்கு மேலே படுத்துக்கிடக்குது''

அவன் போட்ட சத்தத்தைக் கேட்டு மற்றவர்கள் அவன் காட்டியதிக்கினை நோக்கினர்.

> எப்பொழுதும் கீழே விழாமல்
> இருப்பது புகழுக்குரியதல்ல; விழும்
> போதெல்லாம் விழித்தெழுவது
> தான் பெரும் புகழ் பெறும் வழி.
>
> -கன்பூஷியஸ்-

''ஓமடா. மத்தியானச் சாப்பாட்டை ஒசியிலை முடிச்சுப்போட்டு நல்ல நித்திரையில கிடக்கிறார்''

''சத்தம் போடாதேங்கோ. எங்களைக் காணேல்லை''

''இண்டைக்கு வழமா மாட்டிக் கொண்டார்''

அவர்கள் ஆரவாரத்துடன் அதைப் பார்த்துக் கொண்டிருக்க, ஆனால் அது அவர்களின் ஆரவாரத்தினை அறியாமல் முன்னங்கால்களிரண்டிற்குமிடையில் தலையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைச் செருகியபடி சுருண்டு படுத்துக்கிடந்தது. றோட்டில் நடந்து செல்லும் பாதசாரிகளையோ இடைக்கிடை உறுமிச்செல்லும் வாகனங்களின் இரைச்சலையோ அது பொருட்படுத்தவில்லை. இப்படித் தொடர்ந்து படுத்துக்கிடந்தது இவர்களின் பொறுமையைச் சோதித்தது.

''இவர் இப்போதைக்கு எழும்பமாட்டாரே?''

''நல்லாச் சாப்பாடு கிடைச்சிட்டுது''

''டேய் கல்லைத்தூக்கி எறிஞ்சு பாக்கட்டே?',

''கொஞ்சம் பொறு எழும்பினால் எங்களைக் கலைக்கும்'' என அவன் சொல்லி முடிப்பதற்குள் அது எழும்பி விட்டது.

''அதுக்கு நாங்கள் கதைச்சது கேட்டுட்டுது அதான் எழும்பிட்டுது''

''டேய் கவனமடா எங்களைக் கண்டதும் துரத்திக் கொண்டு வரும்''

''கொஞ்சம் பொறு எழும்பிட்டுது. என்ன செய்யுது பாப்பம்''

அது தனது முன்னம் கால்களிரண்டையும் வலிமையாக நிலத்தில் பதித்தபடி நின்று கொண்டு தலையை நிமிர்த்தி இவர்களைப் பார்த்தபின் உதடுகள் மேலே விரிந்து பற்கள் தெரிய உறுமியது.

''இப்ப எங்களைப் பாத்திட்டுது''

ஒருவன் பெரிதாய்ச் சத்தம் போட்டான்.

''டேய் வாங்கடா ஒடுவம் கலைச்சுக் கொண்டு வரப்போகுது''

''சும்மா பொறுங்கடா. அப்ப தொடக்கம் நடக்காம ஒரேயிடத்திலை நிற்குது.''

''காலமை வரேக்க என்ன மாதிரி துரத்திக் கொண்டு வந்தது''

அவர்களுக்கு அது நின்ற நிலமையினால் பல கேள்விகள் எழுந்து பின் அடங்கியது.

தேவையில்லாத போது வாயை மூடிக் கொண்டிருங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். சொல்வதைதீப்பொறி எழச் சொல்லுங்கள்.

–பெஞ்சமின் பிராங்க்ளின்–

''சரியடா கதையை நிப்பாட்டுங்கோ. எங்கட வேலையைத் தொடங்குவம்.''

என ஒருவன் மற்றவர்களை அழைத்தான் அவன் அழைப்பை அவர்களும் உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். பின் அவர்கள் கவனம் அருகில் றோட்டுப் போடுவதற்காக குவிக்கப்பட்டிருந்த கற்குவியலின் மேல் சென்றது. ஒருவன் பலமாகக் கத்தினான்.

''எல்லோரும் பொறுக்குங்கோடா கல்லை எறிவம்''

அடுத்த கணம் அவர்கள் கற்குவியலின் மேல் பாய்ந்து கற்களைப் பொறுக்கினர்.

அடுத்துப்பல கல்லெறிகள் அதன் மீது விழத்தொடங்கின. இத் திடீர்த்தாக்குதலை அது எதிர்பார்க்கவில்லை. கற்கள் பொல பொலவெனத் தொடர்ந்து விழுந்ததால், அதற்குச்சற்று குழப்பமாக இருந்தது. ஆனாலும் உடம்பில் வலி கடுமையாக எடுத்ததைத் தொடர்ந்து அது கோபத்துடன் அவர்களை நோக்கித் துள்ளிப் பாய, அவர்கள் எறிவதை விட்டுவிட்டு ஓட்டமெடுத்தனர்.

''ஓடுங்கோடா. நல்ல காலம்''

''என்ன மாதிரிப் பாஞ்சுது''

நெஞ்சு படபடக்க ஓடியவர்கள் ஓட்டத்தை நிறுத்தி அப்படியே நின்று பார்த்தார்கள். அது பழையபடி குப்பை மேல் நின்று கொண்டிருந்தது.

''என்னடா அது அங்கேயே நிக்குது''

''ஓமடா அங்கதான் நிக்குது நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உங்களுடைய முயற்சிகளுக்கு நீங்கள் எந்தவிதமான எல்லையும் ஏற்படுத்திக் கொள்ளாமலிருந்தால் உங்களால் மிகப் பெரிய காரியங்களைச் செய்யமுடியும்.
>
> –நியூ மேன்–

நினைச்சன் அது பாஞ்ச பாச்சலை கண்டு துரத்திக் கொண்டுதான் வருகுதெண்டு.''

இப்போது அவர்களுக்குத் தாங்கள் அப்படி ஓடியது ஒரு பக்கம் வெட்கத்தையும், மறுபக்கம் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியது. பின் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

''சரி வாங்கடா போவம். இனி ஒருத்தரும் ஓடப்படாது''

என ஒருவன் கட்டளையிட்டான். மற்றவர்கள் மறுபடி ஓடிச் சென்று கற்களைப் பொறுக்கத் தொடங்க, இடையில் ஒருவன் மட்டும் புதிதாக எதையோ கண்டு விட்டவன் போல் சத்தம் செய்தான்.

''அடேய் இஞ்ச பாருங்கோ. அதின்ர பின்னங் கால் இரண்டையும் யாரோ கட்டிப் போட்டிருக்கிறார்கள்.''

அவன் கண்டதை மற்றவர்களும் இப்போது பார்த்தார்கள்.

''அதுதான் அவர் சும்மா பாஞ்சு வெருட்டி எங்களை ஓடச் செய்தவர்.''

''இனிப்பயமில்லை எறியுங்கோடா கல்லை அவரால் இனி ஒண்டும் செய்ய செய்ய முடியாது.''

அவர்கள் மகா ஆனந்தத்துடன் தமது வேலையைத் தொடங்கினர்.

''எறியுங் கோடா''

''எறியுங் கோடா''

''நல்லாத்தான் எறியுங்கோடா''

அவர்கள் தங்களை மறந்து செயலில் ஈடுபட்டிருந்தார்கள். அது வலி தாங்காமல் ஓட முயன்றது, முடியவில்லை. பின்னங் கால்களிரண்டும் பலமாக கட்டுப்போடப் பட்டிருந்தது. அங்கும் இங்கும் துள்ளி விழுத்தது.

முடிவில், விழும் கல்லெறிகளைப் பொருட்படுத்தாமல் தலையைக் குனிந்து கட்டியிருந்த கட்டைப் பற்களினால் கௌவி இழுத்து அறுக்கத் தொடங்கியது. தொடர்ந்து விடாமல் முயன்றது. சில நிமிடங்களில் தனது கட்டை அறுத்துக்கொண்டு ஒரு புதிய உற்வேகத்துடன் இழந்த சக்தியெல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு அவர்களை நோக்கி உறுமியபடி பாய்ந்தது.

அடுத்த கணம் அவர்கள் ஆளுக்கொரு திக்காகக் கத்தலுடன் ஓட்டமெடுத்தனர்.

''டேய் எல்லோரும் ஓடுங்கோ ''

''கட்டை அவிட்டுப் போட்டுது''

(யாவும் கற்பனை) ●

வாசக உள்ளங்களே!

நீங்களும் உள்ளத்தில் சந்தாதாரராக இணைந்து உள்ளத்தின் உயர்வுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்.

ஓராண்டு சந்தா: ஐம்பத்தைந்து ரூபா
அரையாண்டு சந்தா: முப்பது ரூபா

(தபால் செலவுகள் தனி)

சந்தா அனுப்புவோர்:

செ. செல்வகுமார்
வளர்மதி சனசமூக நிலையம்
செம்பியன் லேன்
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

என்ற முகவரிக்கு காசுக்கட்டளையாக அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு படைப்பாளியின் பார்வைப் பதிவுகள்

□ வாகுலேயன்

07-06-1989

அமைதியான அதி காலைப் பொழுது. சிலு சிலுக்க வைக்கும் குளிர் காற்று வேறு. கோயில்வெளி வீதியின் வெண்மணற் பரப் புக்கூட சந்தோஷத்தினைத் தந்தது.

இள நீலவானத்தில் சில பறவைகள் பறந்து போயின. இரண்டு மூன்று வெண் மேகக் குவியல்கள் கோயிற் கோபுரத்தினைச் சுகம் விசா ரித்தன.

மெய்யன்பு கொண்ட பக் தர்களும் வேறு சிலரும் கோயிலில் திரண்டிருந்தார் கள். பளீர் என மின்னும் நகைகளும், பட்டுக்களும் புன்னகை பொழியும் வத னங்களுமான பெண்கள். இளம் பெண்கள்.

கோயில் கும்பாபிஷேகத் துக்குத் தலைமைக் குருக்கள் தனது இல்லத்தில் இருந்து வரவேண்டும்.

குருக்கள் வீட்டு வாசலில் சிறு கும்பல். கோயில் மணியக்காரர் தலைமையில் குருக்கள் வாசலுக்கு வர பெண்கள் ஆராத்தி எடுத் தனர். ராஜமரியாதையுடன் குருக்கள் நடைபயின்று சிறிது தூரம் வந்தார்.

விரைந்து வந்த காரில் இருந்து அவர்கள் இறங்கி னார்கள். அதிரடித் தாக்கு தலுக்குத் தயாரானவர்கள் போல ஆயத்தமானார்கள். அவர்கள் வீடியோ கமரா வுடன் வந்தவர்கள். பட மெடுக்க முனைந்தார்கள்.

குருக்களின் நடை தளர்ந் தது. கூட வந்தவர்கள் கட வுளைக் கண்டவர்கள்போல ஆனார்கள்.

அடுத்த கணமே ஒருவரை யும் காணவில்லை. ஒருசில செக்கன்களுக்குள் பெண்கள் நடிகைகளாக மாறி மீண் டும் ஆராத்தி தட்டை எடுக்க வில்லன்களின் அடி யாட்கள் போல் ஆண் அடி யார்கள் போல் கொடுக்க கமலஹாசன் குருக்கள் வேடத்தில் வருவதுபோல குருக்கள் நின்றார்.

மீண்டும் தொடங்கியது சகல நிகழ்வுகளும். ஈழத்துப் பாரதிராஜாக்கள் பட மெடுத்துக்கொண்டு இருந் தனர்.

சுபநேரம், சடங்குகள் என் றெல்லாம் சைவ சமயத்தில் பேசப்படுகின்றதே அவை யெல்லாம் எங்கே போய் விட்டன. தயவு செய்து யாராவது சொல்லுங்க ளேன்.

கோயிலுக்குப் போனால் என்ன? கலியாண நிகழ் வாக இருந்தால் என்ன? வீடியோவுக்கு உள்ள முக்கி யத்துவம் வேறு யாருக்கு வரும்?

16-07-1989

கறுத்த வண்ணம் பூசியது போல படையாக அழுக்குப் படர்ந்த மேசை. ஈரப் பிசு பிசுப்பு வேறு.

வெள்ளித்தட்டத்தில் சில வகைப் பலகாரங்கள். எந்த விதமான கட்டுப்பாடும் இல் லாமல் இலையான்கள் அவற் றில் அமர்ந்தன. கலைந்தன போயின, வந்தன. வந்தன போயின.

எதிரே இருந்த நண்பர் அதனைப் பார்த்துச் சங்க டப்பட்டார். எனக்கு அது புதினமாகத் தெரியவில்லை. தினசரிப் பழக்கம் தானே. எனினும் ஆறு வருடங்க ளுக்கு முன்னர் நானும் எதிரே இருக்கும் நண்பரும் இப்படியான கடைகளில் பல காரங்கள் சாப்பிட்டுத் தேனீர் குடித்ததை ஞாபகப் படுத்திப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஒரு வித்தியாசம் நண்பர் ஐந்து வருடங்களுக்கு வெளிநாட்டில் சுகசீவியம் சீவித்துவிட்டு விடுமுறையில் வந்துள்ளார். அவ்வளவு தான்.

பேச்சு என் எழுத்துக்களைப் பற்றித் திரும்பியது.

''பேப்பர்களில் என்னவோஎல்லாம்எழுதுவாயே இப்பவும் அப்படி எழுதுகிறாயா?'' நண்பர்கேட்டார்.

''ம்''

''புத்தகங்கள் ஏதாவது''

''சமீபத்தில் ஒன்று வந்தது''

''எவ்வளவு தந்தார்கள்''

''என்னத்திற்கு''

''புத்தகத்திற்கு'' எனக் கேட்டார் நண்பர்.

எனக்கு எரிச்சலாக இருந்தது. நண்பருக்கு எதை விளங்க வைப்பது, எப்படி விளங்க வைப்பது.

எனக்காக எனது நூலை வெளியிட்ட எனது உள்ளூர் நண்பரை நினைத்தேன். எனது நூலை வெளியிட அவர் செலவழித்துவிட்ட அத்தனை ஆயிரம் ரூபாய்களையும் மீட்டு எடுக்க அவருக்கு எத்தனை வருடங்கள் தேவைப்படும். ●

OPTICIANS & DENTAL TECHNICIANS

MORAIS

50, CLOCK TOWER ROAD
(Opposite Of Wellington Theatre)
JAFFNA.

□ இச்சஞ்சிகை கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினரால் இல. 225 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அபிராமி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவுப் போட்டி இல: 6

1. பிறிதொரு தாளில் விடைகளை எழுதி பிரவேசப் பத்திரத்தைக் கத்தரித்து இரண்டையும் இணைத்து அனுப்புக.
2. சரியான விடைகளை எழுதி அனுப்பும் முதல் மூவருக்கும் முறையே 50/-, 30/-, 20/- பரிசுகளாக வழங்கப்படும்.
3. விடைகள் யாவும் இம்மாதம் 25ந் திகதிக்கு முன்பாக ஆசிரியர்குழு, 'உள்ளம்' வளர்மதி சனசமூக நிலையம், கொக்குவில் என்ற என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வினாக்கள்

1. இலங்கையின் அண்மைய பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற பிரபல திரைப்பட நடிகர் யார்?
2. உலகில் பெண் ஜனாதிபதி பதவியிலுள்ள நாடு எது?
3. சந்திரனில் மனிதன் காலடி வைத்த தினம் எது?
4. தென்மேற்கு ஆபிரிக்க விடுதலை தாபனத்தின் சுருக்கப் பெயர் யாது?
5. அண்மையில் இராணுவப்புரட்சி நிகழ்ந்த ஆபிரிக்க நாடு எது?
6. திருக்குறளில் இருமுறை இடம் பெறும் அதிகாரம் எது?
7. இறுதியாக நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற அமெரிக்க ஜனாதிபதியின் பெயரென்ன?
8. 'டம்டம்' விமான நிலையம் எந்தநகரிலுள்ளது?
9. 'ஆடம்ஸ் அப்பிள்' என்ற உறுப்பு நம் உடலில் எங்குள்ளது?
10. டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் ஆகக்கூடிய ஒட்டங்களைப் பெற்ற சாதனை யாரால் ஏற்படுத்தப்பட்டது?

பொது அறிவுப் போட்டி இல: 5ற்கான விடைகள்.

1) சேர். ஐவர் ஜெனிங்ஸ் 2) டோக்கியோவில் 3) LITTLE BOY 4) அம்மான்
5) திமிங்கிலம் 6) அயத்துல்லா கொமேய்னி 7) மனித உரிமைகள் தினம்
8) பந்துலவர்ணபுர 9) யுரேனியம் 10) பேடன்பவல் பிரபு

பொது அறிவுப் போட்டி இல: 5ற்கான முடிவுகள்

மூதலாம் பரிசு

சுப்பிரமணியக்குருக்கள் சித்திரா
மஞ்சவனப்பதி வீதி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

இரண்டாம் பரிசு

கே. அரசேஸ்வரன்
கலைமகள் வீதி
நல்லூர் வடக்கு
யாழ்ப்பாணம்.

மூன்றும் பரிசு.

க. சிதாஜெயலெட்சுமி
மஞ்சவனப்பதி வடக்கு வீதி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

பிரவேசப் பத்திரம்
பொது அறிவுப் போட்டி இல: 6

பெயர்:-
விலாசம்:-
பாடசாலை:-
வகுப்பு:-

....
பங்குபற்றுபவரின் ஒப்பம்

....
அதிபர் / பெற்றோர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் உயர்வடைய
நம் வாழ்த்துக்கள்

சரஸ்வதி மில்
ஸ்ரேசன்ரோட்,
கொக்குவில்.

உறுதியான இலக்கிய இலக்கில்
உள்ளம் உயர் நடை போட
உவகையுடன் வாழ்த்துகிறோம்...

அம்பாள் எஞ்சினியரிங்
விதானை லேன்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பியூட்டர் கல்வி

COMPUTER PROGRAMMING IN

- BASIC
- D BASE IV
- LOTUS 1-2-3
- WORD PROCESSING

- பயிற்சிக்காலம் 2 மாதங்கள்
- கட்டணம் 1500/- ரூபா

★ O/L படித்த இருபாலாரும் சேரலாம்

★ I B M (Compatible) கம்பியூட்டரில்

கூடிய நேர செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

- பயிற்சி முடிவில் DIPLOMA சான்றிதழ் வழங்கப்படும் -

UNIKCO COMPUTER CENTRE

யுனிக்கோ கொம்பியூற்றர் சென்ரர்

No. 5, மின்சார நிலைய வீதி, 2-ம் ஒழுங்கை.
யாழ்ப்பாணம்.
(ஓப தபாற்கந்தோர் அருகாமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org